# சைவம் போற்றுதும்
# 2018





இலங்கை சைவநெறிக் கழகம்

# கழகப்பண்

சைவம் போற்றுதும் சைவம் போற்றுதும்
திங்கள் திகழ் முடியார் நல்லடியார் அடியென்று
தம்பிரான் தாள் தொழுகலான்!

சைவம் போற்றுதும் சைவம் போற்றுதும்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனென்றும்
ஓதுநல் மறை ஒழுகலான்!

சைவம் போற்றுதும் சைவம் போற்றுதும்
நாமார்க்கும் குடியலோம் நமனை அஞ்சோமென்ற
நாவரசர் அடியொழுகலான்!

சைவம் போற்றுதும் சைவம் போற்றுதும்
நாற்பாதம் குருலிங்கம் சங்கமம் வழிநின்று
நற்கதி சென்றடைகலான்!

ஆகமம் போற்றுதும் அருமறை போற்றுதும்
நால்வரும் நால்வரும் நாவலரும் நவின்ற நல்
நற்றமிழ்ச் சிவம் திகழலான்!

செஞ்சிவம் போற்றுதும் சிவபூமி போற்றுதும்
எழில்சைவநெறிக் கழகம் ஈழத்தில் நீடோங்க
இன்னருள் தான் புரிதலான்!

உ

சிவமயம்

# இலங்கை சைவநெறிக் கழகம்

தாழ்வெனும் தன்மையோடு

வழங்கும்

# சைவம் போற்றுதும் - 2018

தத்துவத்தையும் பண்பாட்டையும் இலக்கியத்தோடு இணைத்து,

சிவத்தமிழ் பருகும் திருவிழா

நிகழ்பொழுது : மாலை 3.30 மணி, காரிக்கிழமை,

மேழத் திருவள்ளுவர் ஆண்டு 2048, 12ம் மாதம் (பங்குனி),

24ம் நாள். (கிரிக்கேரியன் ஆண்டு 2018 - 04 - 07ம் நாள்)

நிகழிடம் : சங்கரப்பிள்ளை மண்டபம், கொழும்புத் தமிழ்ச் சங்கம்

முதன்மை அனுசரணை

**வெள்ளவத்தை நித்தியகல்யாணி நகைமாளிகை**

துணை அனுசரணை

**சைவநெறித் தொண்டர் கழகம் - கனடா**

**சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை - டென்மார்க்**

சிறப்பு அனுசரணை

**லிட்டில் ஏசியா எம்போரியம்**

# உள்ளடக்கம்


**அருளாசியுரை**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் — V

**வாழ்த்துரை**

திரு. டி.எம்.சுவாமிநாதன்
அமைச்சர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு — VI

திரு. அ.உமாமகேஸ்வரன்
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் — VII

சைவப்புலவர் சித்தாந்தச்செம்மணி திரு.செல்லையா நவநீதகுமார் M.A. — VIII

விடைக்கொடிச் செல்வர் திரு. சின்னத்துரை தனபாலா — IX

பதிப்பாசிரியர் உரை — X

இலங்கை சைவநெறிக் கழகப் பொருளாளர் உரை — XII

நூல் நெறியாள்கை ஆசிரியர் உரை — XIII

**இலங்கை சைவநெறிக் கழக உறுப்பினர் விபரம்** — XIV

**பகுதி 1**

சைவசமயம் — 1

சைவசமயத்தில் வழிபடு கடவுள் — 8

சைவ சமய நூல்கள் — 13

விடைக்கொடி — 19

**பகுதி 2**

**சிவபூமிச் சைவ முதலிகள்**

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமி பெருமானார் — 21

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானார் — 23

ஸ்ரீகாசிவாசி சாம்பவஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார் 24

மாயாவாத துவம்ச கோளரி ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை பெருமானார் 27

**சிவபூமிச் சைவத் தேசிகர்**

சைவப்பெரியார் மு. திருவிளங்கம் தேசிகர் பெருமானார் 30

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் பெருமானார் 31

சைவப்புலவர் காசிநாத அருணாசல தேசிகமணி பெருமானார் 33

பண்டிதர் மு. கந்தையா பெருமானார் 35

**சிவபூமிச் சைவத் தாதையர்**

கோமான். பொன். இராமநாதன் பெருமானார் 38

சைவப்பெரியார் கா. சூரன் பெருமானார் 40

**விருது பெறுநர் விபரம்**

க. சைவநெறிக் காவலர் விருது 41

உ. சைவநெறிச் செல்வர் விருது 42

௩. சைவமாமணி விருது 42

௪. சைவசமூகச் செம்மல் விருது 43

௫. மருத்துவமாமணி விருது 44

௬. ஆசிரியமாமணி விருது 45

௭. சைவநெறிப் புரவலர் கலாநிதி மு.கதிர்காமநாதன் விருது 46

## இரண்டாவது குருமஹாசந்நிதான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின்

# அருளாசியுரை



இலங்கை சைவநெறிக் கழகத்தார் சைவசமயத்தை கற்போடு ஒழுகும் நெறியுடமை அனைவரும் அறிந்ததாகும். சிவாச்சிரமவழிநின்று, சமூகப்பணி, சமயப்பணியென்று சைவசமய வளர்ச்சிக்கு தொண்டாற்றி வருகின்றனர். அந்நிய நாட்டுச் சமயங்கள், புறப்புறச் சமயங்கள், புறச் சமயங்கள் என்பவற்றின் கொள்கைகள் சைவசமயத்தாரினுள் ஊடுருவியவாறு இருக்கின்ற இக்காலத்தில், இலங்கை சைவநெறிக் கழகம் "சைவம் காக்கும் கோளரி" யாக பணியாற்றுவது சிவபுண்ணியமாகும்.

"சைவம் போற்றுதும்" விழாவினை இலங்கை சைவநெறிக் கழகத்தார் ஏற்பாடு செய்துள்ளமை திருவருட்சம்மதப் பேறாகும்.

இவ்விழாவில்,

1. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமி பெருமானார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானார், காசிவாசிஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார், மாயாவாத துவம்ச கோளரி கதிரைவேற்பிள்ளை பெருமானார் ஆகிய நால்வரையும் சிவபூமிச் சைவமுதலிகளாகவும்,

2. சைவப்பெரியார் திருவிளங்க தேசிகர் பெருமானார், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தம் பெருமானார், சைவப்புலவர் காசிநாத அருணாசலதேசிக மணி பெருமானார், பண்டிதர் மு. கந்தையா பெருமானார் ஆகிய நால்வரையும் சிவபூமிச் சைவத் தேசிகராகவும்,

3. கோமான் திரு.பொன்னம்பலம் இராமநாதன் பெருமானார், சைவப்பெரியார் கா.சூரன் பெருமானார் ஆகிய இருவரையும் சிவபூமிச் சைவ தாதையர்களாகவும் இலங்கை சைவநெறிக் கழகம் பிரகடனம் செய்வதற்கு எமது திருவருட்சம்மதக் கட்டளை உண்டாகும். எல்லாம்வல்ல சிவகாமியம்மை உடனாய சிவபெருமானின் திருவருட்சம்மதம், இப்பிரகடனத்திற்கு அமைந்திடப் பிரார்த்தித்து, சைவநெறிக் கழகத்தாரை ஆசீர்வதிக்கின்றேன்.

சைவம் போற்றுதும் விழாவில் இப்பிரகடனம் சிறப்புடனே நடைபெறவும், சைவம் போற்றுதும் சிறப்புமலர் சைவத்தமிழ் உலகிற்கு பெரும்பயனாக அமையவேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

எல்லாம் திருவருட்சம்மதம்

இரண்டாவது குருமஹாசந்நிதான
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாச்சாரிய சுவாமிகள்

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

# வாழ்த்துச் செய்தி



ஐந்து வருடங்களுக்கு முன்பு, Dr.கி.பிரதாபன் மற்றும் வி.துலாஞ்சனன் ஆகியோரது முயற்சியால் உருவாக்கப்பட்ட இலங்கை சைவ நெறிக்கழகம், இளைஞர் குழாத்தைக் கொண்டு கிராமங்கள் தோறும் சமயப்பணியையும் சமூகப் பணியையும் முன்னெடுப்பதோடு, கழகம் ஆரம்பிக்கப் பட்ட காலந்தொட்டுக் கதிர்காமக் கந்தனின் உற்சவத்திற் தாகசாந்தி நிலையம் அமைத்து இறைபணி புரிந்து கொண்டிருப்பதையும் முதற்கண் பாராட்டுகிறேன்.

இலங்கை சைவ நெறிக் கழகம் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் 07.04.2018 அன்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் திருமுன்னிலையில் முன்னெடுக்கப்படும் **"சைவம் போற்றுதும்"** விழாவில்,

* ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமி பெருமானார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானார், காசிவாசிஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார், மாயாவாத துவம்ச கோளரி கதிரைவேற்பிள்ளை பெருமானார் ஆகிய நால்வரையும் சிவபூமிச் சைவமுதலிகளாகவும்,

* சைவப்பெரியார் திருவிளங்க தேசிகர் பெருமானார், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தம் பெருமானார், சைவப்புலவர் காசிநாத அருணாசலதேசிக மணி பெருமானார், பண்டிதர் மு. கந்தையா பெருமானார் ஆகிய நால்வரையும் சிவபூமிச் சைவத் தேசிகராகவும்,

* கோமான் திரு.பொன்னம்பலம் இராமநாதன் பெருமானார், சைவப்பெரியார் கா.சூரன் பெருமானார் ஆகிய இருவரையும் சிவபூமிச் சைவ தாதையர்களாகவும் பிரகடனம் செய்து, நடைபெறும் விழாவில் வெளியிடப்படவுள்ள "சைவம் போற்றுதும்" எனும் நூல் இறைகாரியமாய்ச் சிறப்புற்றமைய வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு. டி. எம். சுவாமிநாதன்**

*அமைச்சர்*

*சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு*

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



இலங்கையில் இலக்கியத்தோடு சமயத்தை இணைத்து முன்னெடுக்கும் நிகழ்வுகள் அரிதாகவுள்ள நிலையிற் சமயம், தத்துவம், பண்பாடு, இலக்கியம் ஆகியவை ஒன்றிணைந்த நிகழ்வாக இலங்கை சைவ நெறிக் கழகத்தாரால் 07.04.2018 அன்று கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் திருமுன்னிலையில் முன்னெடுக்கப்படும் விழாவில், சிவபூமிச் சைவமுதலிகளாக ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானார், காசிவாசி ஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார், மாயாவாத துவம்சகோளரி நா.கதிரவேற்பிள்ளை பெருமானார் ஆகிய நால்வரையும், சிவபூமிச் சைவத்தேசிகர்களாக சைவப்பெரியர் திருவிளங்கம் தேசிகர், மட்டக்களப்புச் சைவப்புலவர் காசிநாத அருணாச்சல தேசிகமணி பெருமானார், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் பெருமானார், பண்டிதர் மு.கந்தையா பெருமானார் ஆகிய நால்வரையும், சிவபூமிச் சைவத்தாதையராக சேர்.பொன்.இராமநாதன் பெருமானார், சைவப்பெரியார் கா.சூரன் பெருமானார் ஆகிய இருவரையும் பிரகடனம் செய்யும் நிகழ்வில் வெளியிடப்படவுள்ள **"சைவம் போற்றுதும்"** எனும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வெய்துகின்றேன்.

2013 இல் ஆரம்பிக்கப்பட்டுச் சமயப்பணி, சமூகப்பணி ஆகிய இரண்டையும் சிறந்தமுறையில் ஆற்றிவரும் இலங்கை சைவநெறிக் கழகம் கிராமங்களிற் தம் பணிகளைக் காலூன்றச் செய்து கொண்டிருக்கின்றமை பாராட்டுக்குரியது. புத்தளம், மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலைப் புத்தகப்பைகள் வழங்கும் செயற்றிட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றமையும், வடமேற்கு மற்றும் தென்மேற்குப் பிரதேசங்களிற் குறிப்பாகப் புத்தளம், இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள கிராமத்துக் கோயில்களின் திருவிழாக்களை நடாத்துவதற்கு உதவிகளை நல்குதல் போன்ற செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கன.

இவர்களது இத்தகைய முயற்சிகள், அனைத்துக் கிராம மட்டங்களுக்கும் சென்றடையும் வகையில் மென்மேலும் ஊக்கம் பெறவும், "சைவம் போற்றுதும்" நிகழ்வு சிறப்புறவும் இறைவனை வேண்டி, வாழ்த்தி அமைகிறேன்.

**திரு. அ.உமாமகேஸ்வரன்**

*பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்*

## திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை, சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் – கொழும்பு கிளை இயக்குநர்

# வாழ்த்துச் செய்தி



*கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்*
*செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந் தீமுழங்கத்*
*திருநட்ட மாடியை தில்லைக் கிறையைச்சிற்றம்பலத்துப்*
*பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே*

- அப்பர் சுவாமிகள் (4-81-1)

சைவம் சிவசம்பந்த முடையது. பரம் பொருளாகிய சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள் சைவர்கள்.

எந்நாட்டவர்க்கும் இறைவனாய் இருக்கும் பரம்பொருள் தென்னாட்டிலே சிவனாகவுள்ளான்.

மிகத் தொன்மையான, சிறப்புமிக்க எமது சைவசமயத்தின் பெருமைகளை எல்லாம் மக்கள் மத்தியிலே பரவச் செய்யும் நோக்கிலே ஆற்றல் மிக்க இளைஞர்கள் கூடி சைவம் போற்றுதும் என்றதொரு சைவப் பெருவிழா எடுக்கிறார்கள். அதிலே சைவசமயத்தின் சிறப்புக்களை அறிந்து கொள்ளும் வண்ணம் "சைவம் போற்றுதும்" என்ற நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலினை எல்லோரும் பெற்றுப் படித்துப் பயனுற வேண்டும். இப்பணியிலே தம்மை ஈடுபடுத்திச் செயற்படும் இலங்கைச் சைவநெறிக் கழத்தினரின் பணி மேலும் சிறப்புற எம்பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சைவப்புலவர், சித்தாந்தச்செம்மணி**
**திரு. செல்லையா நவநீதகுமார் M.A.**

### இலங்கை சைவநெறிக் கழகக் காப்பாளர்

### விடைக்கொடிச் செல்வர் திரு. சின்னத்துரை தனபாலா அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



திருமூலர் நாயனாரால் சிவபூமி என சிறப்பித்துச் சொல்லப்பட்டது. எங்கள் ஈழத்திருநாடு. இங்கிருந்து சைவசமய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பெரும் பணியாற்றிவரும் இலங்கை சைவநெறிக்கழகம் தனது காத்திரமான செயற்றிட்டங்களுள் ஒன்றாக **'சைவம் போற்றுதும்'** என்ற பொருளில் விழாவினை ஏற்பாடு செய்திருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். என்னையும் இந்த அமைப்பின் காப்பாளராக நியமித்துள்ளமை திருவருட்பேறாகவே கருதுகிறேன்.

அன்றைய நாளில் சைவத் தமிழ் காவலராகத் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் தொடக்கி வைத்த கருமங்களையும் அவரது சமய சமூகப் பணிகளையும் அவர் வழியில் நின்று தொடரும் வகையில் இலங்கை சைவநெறிக் கழகம் ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்குரியன.

சிவபூமிச்சைவமுதலிகளாக ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானார், காசிவாசி ஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார், மாயாவாத துவம்சகோளரி நா.கதிரவேற்பிள்ளை பெருமானார் ஆகிய நால்வரையும், சிவபூமிச் சைவத்தேசிகர்களாக சைவப்பெரியர் திருவிளங்கம் தேசிகர், மட்டக்களப்புச் சைவப்புலவர் காசிநாத அருணாச்சல தேசிகமணி பெருமானார், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் பெருமானார், பண்டிதர் மு.கந்தையா பெருமானார் ஆகிய நால்வரையும், சிவபூமிச் சைவத்தாதையராக சேர்.பொன்.இராமநாதன் பெருமானார், சைவப்பெரியார் கா.சூரன் பெருமானார் ஆகிய இருவரையும் பிரகடனம் செய்யவிருப்பது இலங்கை சைவநெறிக்கழகத்தின் நல்லதொரு செயற்பாடு என்பதுடன், இந்த சைவப் பெரியார்களது அரும்பெரும் பணிகளை என்றென்றும் மதித்து போற்றும் வகையிலும் எதிர்கால சமுதாயமும் அதனை அறிந்து செயற்படும் வகையிலும் ஆரோக்கியமான நிலையைத் தோற்றுவிக்கும் எனவும் எதிர்பார்க்கலாம்.

இலங்கை சைவநெறிக் கழகத்தின் மற்றுமொரு செயற்பாடாக, 'சைவம் போற்றுதும்' என்ற நூல் வெளியீடு அமைந்திருக்கிறது. கழகத்தின் இத்தகைய பணியும் காலத்தக்குப் பொருத்தமானது என்பது மட்டுமல்ல, காத்திரமானதுமாகும். இலங்கை சைவநெறிக் கழகத்தின் **'சைவம் போற்றுதும்'** விழா சிறப்பாக நடந்தேறி வெற்றிகரமாக அமைவதற்கு எல்லாம்வல்ல எம்பெருமான் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**விடைக்கொடிச் செல்வர்**
**திரு. சின்னத்துரை தனபாலா**

# பதிப்பாசிரியர் உரை





இலங்கை சைவநெறிக் கழகமானது, சைவசமூகத் திருப்பணிக் கழகமென்ற பெயரில் கிரிக்கேரியன் ஆண்டுப்படி 30.06.2013 அன்று, கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் கூடிய கூட்டத்தினூடு, உருவாக்கப்பட்ட அமைப்பாகும். எங்கள் அமைப்பின் நோக்கம், சைவசமயத்தார் அனைவரும் தம்சமய உண்மைகளை உணர்ந்தவராக சிறப்புற வேண்டு மென்பதேயாகும்.

*மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை*
*தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்*
*கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்*
*பசி வந்திடப் பறந்து போம்.*

பசியோடு இருப்போருக்கு சமய உண்மைகளைப் போதித்தல் அறமாகா. அந்நியசமயத்தாரின் இந்த உத்தி, சைவசமயத்தாரைப் பொறுத்தவரை அறத்துக்குப் புறம்பான ஒன்றாகும். எனவே, சைவசமய உண்மைகளை மக்களிடம் கொண்டுசென்று, அந்நிய சமயத்தார் செய்யும் மதமாற்றங்களைத் தடுக்கவேண்டுமென்றால், முதலில் எம்சமயத்தாரில் பொருளாதாரத்தில் நலிவுற்றுள்ளோருக்கு, பொருளாதார உதவிகளை மேற்கொள்ளவேண்டியதே நம்கடன் என்பதை உணர்ந்து, சமூகப்பணிகளை ஆற்றத் தொடங்கினோம்.

மட்டக்களப்பு, இரத்தினபுரி, கதிர்காமம், புத்தளம் என்று எங்கள் பணிகள் பலபிரதேசங்களுக்கு விரிந்தன. கிராமங்களில் சமயத்தையும் சமூகத்தையும் பிணைக்கும் அலகுகளே ஆலயங்களென்று தெளிந்து, ஆலய திருவிழாக்களில் அன்னதானங்களைப் பொறுப்பேற்று செயற்படுத்தத் தொடங்கினோம். ஆபிரகாமிய சமயத்தாரின் மதமாற்றங்களிலிருந்து எங்கள் தமிழ்ச் சமூகத்தாரை காத்திடுமாறு எங்கள் சமூகப்பணிகள் விரிந்தன.

அதுபோல், புறச்சமயிகளான ஸ்மார்த்தமதத்தாரின் ஆதீக்கம், இந்துமதக் கூட்டினால் சைவசமயத்துள் விசச்செடிபோல் பெருகிநிற்பதற்கு பரிகாரம் தேடவேண்டியதும் நம்கடனே என்று தெளிந்திருந்தமையால், சமயப்பணியாக சைவசமய உண்மைகளை சைவசமயத்தாருக்கு போதிக்குமாறு துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தல், சொற்பொழிவுகளை நடத்துதல், சைவசமய பிரச்சார வகுப்புக்களை சைவப் பாடசாலைகளில் நடத்துதல் போன்ற பணிகளை சிரம்மேற்கொண்டு, செயற்பட்டோம்.

எமது பணிகளின் ஒரு பரிணாமமாக, சைவம் போற்றுதும் இலக்கிய விழாவை ஏற்பாடுசெய்துள்ளோம். இவ்விழா, தத்துவத்தையும் பண்பாட்டையும் இலக்கியத்தோடு இணைக்கும் திருவிழாவாகும். இது பண்டிதமணி கூறிய கந்தபுராணக் கலாச்சாரத்தின் இன்னொரு பரிணாமமாகும்.

சைவம் போற்றுதும் விழாவில்,

1. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமி பெருமானார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானார், காசிவாசிஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார், மாயாவாத துவம்ச கோளரி கதிரைவேற்பிள்ளை பெருமானார் ஆகிய நால்வரையும் சிவபூமிச் சைவமுதலிகளாகவும்,

2. சைவப்பெரியார் திருவிளங்க தேசிகர் பெருமானார், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் பெருமானார், சைவப்புலவர் காசிநாத அருணாசலதேசிக மணி பெருமானார், பண்டிதர் மு. கந்தையா பெருமானார் ஆகிய நால்வரையும் சிவபூமிச் சைவத் தேசிகராகவும்,

3. கோமான் திரு.பொன்னம்பலம் இராமநாதன் பெருமானார், சைவப்பெரியார் கா.சூரன் பெருமானார் ஆகிய இருவரையும் சிவபூமிச் சைவ தாதையர்களாகவும நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானத்தின் திருவருட்கட்டளைச் சம்மதத்துக்கு அமைய, பிரகடனம் செய்யவுள்ளோம். இப்பிரகடனம், சைவசமயத்தார் கொண்டாடவேண்டிய பிரகடனம்.

சாதி, பிரதேசங்களினுள் சைவசமயத்தைச் சுருக்கிவிட்டு, ஸ்மார்த்தமதக் கொள்கைகளையும், புத்திந்துக் கொள்கைகளையும் சைவசமயத்தாரின் தலையில் சுமக்கவைக்க முயன்றுகொண்டுள்ள சக்திகளுக்கு இடியாக இப்பிரகடனம் நிகழவுள்ளது.

மேலும், சைவம் போற்றுதும் என்னும் பெயரில், சைவசமய உண்மைகளை உள்ளபடி உணர்த்தும் கட்டுரைகளைத் தாங்கியவாறு, சிவபூமிச் சைவமுதலிகள், தேசிகர், தாதையர் குறித்த கட்டுரைகளையும் தாங்கி, வெளிவருகின்றமை நம்தவப் பயனின் விளைவாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான், கோமான் பொன்னம்பலம் இராமநாதன் பெருமான் ஆகியோர் குறித்து, தமிழுலகம் நன்கு அறிந்துள்ளமையின் பொருட்டு அப்பெரியோர்களின் விபரங்கள் விரிவாக எழுதப்படவில்லை.

இந்நூலை, சைவத்தமிழுலகு விரும்பி வரவேற்குமாயின், அது நாம்பெற்ற திருவருட்சம்மதக் கட்டளையின் வெளிப்பாடாகும்.

எமது பணிகள், மேலும் மேலும் விரிந்து சைவத்தமிழுலகு பயன்பெறுமாறு பணிசெய்ய வேண்டி, எல்லாம் வல்ல பார்வதி உடனாய பரமேசுவரனின் திருவடிகளைத் தொழுகின்றோம்.

எல்லாம் திருவருட்சம்மதம்

பதிப்பாசிரியர்

**மருத்துவர். கி. பிரதாபன்**

*(இலங்கை சைவநெறிக் கழகத் தலைவர்)*

**திரு. வி. துலாஞ்சனன்**

*(இலங்கை சைவநெறிக் கழகப் பொதுச்செயலாளர்)*

# இலங்கை சைவநெறிக் கழகப் பொருளாளர் உரை



இலங்கை சைவநெறிக் கழகத்தாராகிய நாம், சமூகப்பணி, சமயப்பணியெனும் இரண்டையும் எம்மிரு கண்களாகக் கொண்டு, சைவப்பணியாற்றி வருகின்றோம். அப்பணிகளில் ஒன்றாக, இன்று "சைவம் போற்றுதும்" விழா நடைபெறவுள்ளதோடு, இவ்விழாவில் சிவபூமிச் சைவசமய முதலிகள், தேசிகர், தாதையர் பிரகடனம் நடைபெறவுள்ளமையும், இவ்விழாவினைச் சிறப்பிக்குமாறு சைவம் போற்றுதும் நூல் வெளி வருகின்றமையும் திருவருட்சம்மதம் துணைநிற்பதன் நிமித்தமேயாகும்.

இவ்விழாவும், விழாச் சிறப்புமலரும் சைவத் தமிழுலகால் போற்றப்படு மென்று திடமாக நம்புகிறோம்.

எல்லாம் திருவருட் சம்மதம்.

**திரு. இரா. இராஜ்குமார்**
*பொருளாளர் - இலங்கை சைவநெறிக் கழகம்*

# நூல் நெறியாள்கை ஆசிரியர் உரை



எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் திருவருட்சம்மதமாய், இலங்கை சைவநெறிக் கழகத்தின் பிரதித் தலைவராகவும், இவ்விழாவின் நூலுக்குரிய நெறியாள்கை ஆசிரியராகவும் பணியாற்றும் பேறு அமையப்பெற்றுள்ளமை தவப்பயனாகும்.

இலங்கை சைவநெறிக் கழகத்தின் சைவசமயக் கற்புடமைச் சிறப்பின் ஒரு அம்சமாக, சைவம் போற்றுதும் விழாவில் வெளியிடப்படவுள்ள "சைவம் போற்றுதும்" என்னும் இந்நூல், தமிழ்ச் சமூகத்தால் நன்கு பாராட்டப்படும் என்று நம்புகிறோம். திருவருள் துணைபுரிவதாகட்டும்.

நூலாக்கச் செயற்பாட்டில் எம்பணிக்குத் துணைநின்ற நல்நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றிக்கடன்பட்டவனாவேன்.

எல்லாம் திருவருட் சம்மதம்.

**திரு. கோ. இளையராஜா**

*பிரதித் தலைவர்– இலங்கை சைவநெறிக் கழகம்*

# இலங்கை சைவநெறிக் கழக உறுப்பினர் விபரம்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | விடைக்கொடிச் செல்வர் திரு. சி. தனபாலா |
| தலைவர் | : | Dr. திரு. கி. பிரதாபன் |
| பிரதித் தலைவர் | : | திரு. கோ. இளையராஜா |
| துணைத் தலைவர் | : | சித்தாந்தரத்தினம் |
| | | செல்வி. செ. உதயகௌரி |
| பொதுச்செயலாளர் | : | திரு. வி. துலாஞ்சனன் |
| துணைச் செயலாளர் | : | திரு. அ. கஜந்தன் |
| பொருளாளர் | : | திரு. இரா. இராஜ்குமார் |
| சமூகக்குழுத்தலைவர் | : | திரு. சி. வினோதரூபன் |
| ஊடகப்பொறுப்பாளர் | : | திரு. செ. ஈஸ்வரன் |
| செயற்குழு உறுப்பினர் | : | திரு. சபா. தாஸ்குமார் |
| | | திரு. ந. குருசாந் |
| | | திருமதி கௌரி தாஸ்குமார் |
| வடமாகாணப் பொறுப்பாளர் | : | திரு. ஜீ. ஷஜீவன் (தூமி அமைப்பாளர்) |
| கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் | : | திரு. து. காந்தன் |
| மலையக பொறுப்பாளர் | : | திரு. தர்மராஜா சசிந்தரநாத் |
| கனடா இணைப்பாளர் | : | திரு. நா. அ. கண்ணப்பன் |
| | | (சைவநெறித் தொண்டர் கழகம் - கனடா) |
| டென்மார்க் இணைப்பாளர் | : | திருமதி சயதேவி செல்வராஜன் |
| நெதர்லாந்து இணைப்பாளர் | : | திரு. கி. பால்ராம் |
| பாடசாலை மாணவர் அணி | : | செல்வன் த. பவிசன் |
| | | செல்வன் த. புவிசன் |



# சைவசமயம்

**சி**வனை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயம். கிழக்கே சீனத்திலிருந்து, மேற்கே ஆப்கானிஸ்தான் வரை, வடக்கே உஸ்பெகிஸ்தானிலிருந்து தெற்கே இலங்கை வரை கிடைத்துள்ள சிவவழிபாட்டுச் சின்னங்கள், ஒருகாலத்தில், இன்று சைவர்கள் வாழ்த்துப் பாடுவது போல, மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கியதற்கான ஆதாரங்களாக விளங்குகின்றன.

## இந்து மதம்

சைவம் பற்றிப் பார்ப்பதற்கு முன், இந்து சமயம் என்றால் என்னவென்று அறிந்துகொள்வது அவசியம். ஹிந்து என்பது ஆரம்பத்தில், ஒரு நாட்டின் பெயர். "சிந்து நதி" பாய்ந்த பூமி பாரசீகரால் "ஹிந்துஸ்தானம்" என்று அறியப்பட்டது. அவர்களது உச்சரிப்பில் சகரம் ஹகரமாக மாறும் என்பதால், சிந்து ஹிந்து என்றானது. ஹிந்துஸ்தான நிலத்தில் வதிபவர்களும், ஹிந்துக்கள் ஆனார்கள்.

காலனிய ஆட்சியாளர்கள், மதம் பரப்புதலை முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். வெளித்தோற்றத்தில் பெரும்பாலான ஒற்றுமைகளையும், மிகக்குறைந்தளவான வேற்றுமைகளையும் கொண்டிருந்த சைவம், வைணவம், சாக்தம், சுமார்த்தம், நாட்டார் வழிபாடுகள் முதலானவற்றை அவர்களால் அவ்வளவு இலகுவாகப் பிரித்து அடையாளங் காணமுடியவில்லை. எனவே, அவையனைத்தும் ஒட்டுமொத்தமாக, ஹிந்துஸ்தானத்து ஹிந்து மக்களின் மதம் என்ற பொருளில் "ஹிந்து" என்ற பெயரையே பெற்றன.

இலங்கை, தென்கிழக்காசியா முதலான இடங்களில் இந்துஸ்தானத்து மக்களையொத்த வழிபாட்டுகளைக் கைக்கொண்டிருந்த பலரை அடையாளங்கண்ட வெள்ளையர், அவர்களையும் "ஹிந்து சமயத்தினர்" என்றே அழைத்தனர். ஹிந்துஸ்தானம் பிற்காலத்தில் "இந்தியா" என்ற பெயரைப் பெற்றுக்கொள்ள, ஹிந்து என்பது மதத்திற்கான பெயராக எஞ்சியது. ஒரு நதியின் பெயர், நாட்டின் பெயராகி, அந்த நாட்டின்

குடிமக்களின் பெயராகி, இறுதியில் ஒரு சமயத்தின் பெயராக மாறியது இப்படித்தான்! எனவே இந்து சமயம் ஒரு தனிச்சமயம் அல்ல; உண்மையில் ஒரு மதக்கூட்டமைப்பு என்பதைப் புரிந்துகொள்ளலாம். எனவே இந்து என்ற சொல்லை ஒருபோதும் தனிச்சமயமொன்றைக் குறிப்பிட பயன்படுத்த முடியாது.

## இந்துவா? சைவமா?

தமிழகத்தில் சைவசமயம் என்ற சொல் பெருமளவு வழக்கொழிந்து போயிற்று. மரக்கறி உணவைக் குறிப்பிடவே அது இன்று பெருமளவு பயன்படுகின்றது. இலங்கை, மலேசியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை, இந்து என்பதும் சைவம் என்பதும் ஒத்தகருத்துச் சொற்கள். ஊடகங்களும், சமய நிறுவனங்களும் சமயம்சார் சமூகச் செயற்பாட்டாளர்களும் கூட இரண்டையும் ஒன்று என்று தான் கருதுகிறார்கள். மிகப்பழங்காலம் தொட்டே, ஈழத்தமிழர் தம்மை சைவராகவே அடையாளப்படுத்தி வந்தவர்கள் என்பதை இங்கு கிடைக்கும் வரலாற்றுக்குறிப்புகள் மூலம் காணலாம். அவ்வளவு ஏன், பேச்சுவழக்கில் சைவர்கள் கிறிஸ்தவர்களை, “வேதக்காரர்” என்றும், சைவரை அவர்கள், “சைவக்காரர்” என்றும் அழைக்கும் வழமை இன்றும் நீடிப்பதே சைவத்தின் தொடர்ச்சித்தன்மைக்கு அப்பட்டமான சான்று.

ஒரு சமயத்தின் பெயராகத் திகழ்ந்த “சைவம்” என்ற பதம், பிற்காலத்தில் மரக்கறிச் சாப்பாட்டை மட்டுமே குறிப்பிடுவதற்குப் பயன்படும் பரிதாபம் அரங்கேற, அதன் இடத்தில், “இந்து” என்ற சொல்லாடல் மெல்ல வேரூன்றத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் எழுந்த பாடசாலைகளும் அமைப்புகளும் தம்மை “இந்துப் பாடசாலைகள்”, “இந்து சங்கங்கள்” என்றே அழைக்கலாயின.

வழிபாட்டுத்தளத்தில் சைவம், வைணவம் முதலான நெறிகள், ஒன்றையொன்று ஒத்துப்போகலாம். ஆனால், மெய்யியல் தளத்தில் அவை ஒன்றிலிருந்து ஒன்று மிக ஆழமாக வேறுபடுபவை. ஒன்றையொன்று நிராகரிப்பவை. ஆபிரகாமிய அடிப்படை கொண்ட யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்றையும் ஒரே மதமாக முடிவுகட்டுவது எத்தனை பெரிய தவறோ, அதைவிடப்பெரிய தவறு, சைவம், வைணவம், சுமார்த்தம் முதலான – தத்தமக்குள் முற்றிலும் வேறுபட்ட கோட்பாடுகளைக் கொண்ட சமயங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி “இந்து” என்று சொல்வது. இப்போது எழுந்துள்ள முக்கியமான சிக்கல், இந்து மதக்கூட்டமைப்பின் அதிகாரபீடங்களாகத் தம்மைக் கருதிக் கொள்பவர்கள் எல்லா இந்து உட்பிரிவுகளையும் சிதைத்து ஒற்றைப்படையாக்கி, மேலைத்தேய மதங்கள் போல மாற்றமுயல்கின்றனர் என்பதே. அது ஒட்டுமொத்த

இந்தியச்சமயங்களின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

## இந்துமதத் தொகை

விடயம் தெரிந்த யாரிடம் கேட்டாலும், இந்துசமயம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கௌமாரம், காணபாத்தியம் ஆகிய ஆறு மதங்களின் தொகுப்பு என்று தான் சொல்வார்கள். ஆதிசங்கரரே இந்த ஆறு பிரிவுகளையும் ஸ்தாபனம் செய்தார் என்பது வேதாந்திகளின் நம்பிக்கை. ஆனால் ஆதிசங்கரரின் காலத்துக்கு (கி.பி 8ஆம் நூற்றாண்டு) பல ஆண்டுகள் முன்பேயே சைவமும் வைணவமும் தனித்தனி மதங்களாக வடிவம் பெற்று விட்டன என்பதே வரலாற்று உண்மை.

ஆதிசங்கரரின் பின்பற்றுநர்களாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இன்றைய சங்கர மடங்கள், தாம் கடைப்பிடிப்பது சைவமோ, வைணவமோ அல்ல, "சுமார்த்தம்" என்கின்றன. சுமார்த்தம் என்றால் ஸ்மிருதிகளை (சமய நீதி நூல்கள். உதாரணமாக மனுஸ்மிருதி போல!) அடிப்படையாகக் கொண்டது என்று அர்த்தம். சங்கரரின் ஷண்மதஸ்தாபனம் எனும் தொன்மம், மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவது இவர்களால் மட்டுமே. இப்படிப் பார்த்தால், இன்றைய இந்து சமயத்தில் சுமார்த்தத்தையும் ஒரு தனிப்பிரிவாகக் கொள்ள வேண்டுமே தவிர, சுமார்த்தத்தின் கொள்கைகளுள் ஒன்றான "ஷண்மதக்" கோட்பாட்டை முழு இந்து சமயங்களுக்கும் பிரயோகிப்பது அபத்தம்.

ஷண்மதக் கோட்பாடை ஒருபக்கம் வைத்து விட்டு ஆராய்ந்தால், இன்றைய இந்து மதக்கூட்டமைப்பையும் ஆறுவிதமாகவே பிரிக்கலாம். சைவம், வைணவம், சாக்தம், சுமார்த்தம், புத்திந்து அக இந்து என்று. சைவம் பற்றி நமக்கு ஓரளவு தெரியும். ஏனைய பிரிவுகளின் தனித்துவங்கள் என்ன, அவை ஒன்றோடொன்று எப்படி வேறுபடுகின்றன என்பதை இனி சுருக்கமாகப் பார்ப்போம்:

## வைணவம்

திருமாலை முழுமுதலாகக் கொண்ட சமயம் வைணவம். தமிழ்வழக்கில் முருகனுக்குச் சமனான தொன்மையுடன் மாயோனாகத் திகழ்ந்த கண்ணனுக்கே வைணவத்தை வளர்த்ததில் பெரும்பங்கு உண்டு. சிவாகமங்கள் போல வைணவருக்கும் இருவகை ஆகமங்கள் உண்டு. அவை பாஞ்சாராத்திரம், வைகானசம் என்று அறியப்படுகின்றன.

திருமகள், பிரம்மா, உருத்திரன், சனற்குமாரர் ஆகிய நால்வர் மூலமும் வைணவம் உலகுக்கு போதிக்கப்பட்டது என்பது வைணவர்

நம்பிக்கை. இராமனுஜர் திருமகள் வழி வந்த ஸ்ரீசம்பிரதாயத்தையும், மத்துவர் பிரம்மா வழிவந்த பிரம்ம சம்பிரதாயத்தையும், விஷ்ணுசுவாமி உருத்திர சம்பிரதாயத்தையும், நிம்பார்க்கர் குமார சம்பிரதாயத்தையும் தோற்றுவித்தனர். இன்று தமிழகத்தில் பெரும்பாலும் திகழ்வது ஸ்ரீசம்பிரதாயம் அல்லது ஸ்ரீவைணவம் ஆகும். பன்னிரு ஆழ்வாரைப் போற்றும் அச்சம்பிரதாயத்தில், தென்கலை, வடகலை எனும் இருபிரிவுகள் இன்று உண்டு.

வைணவத்தின் நாற்பெரும் பிரிவுகளில் பிரம்ம சம்பிரதாயத்தின் கிளையாக வங்கப்பகுதியில் தோன்றிய கௌடிய வைணவமே, இன்றைய இஸ்கோன் அல்லது ஹரே கிருஷ்ணா அமைப்புக்கு அடிப்படை. இன்று விஷ்ணுசுவாமியின் உருத்திர சம்பிரதாயம் மறைந்துவிட்டதால், அதன் இடத்தில் வல்லபர் என்பார் தோற்றுவித்த புஷ்டிமார்க்கம் வைத்துப் போற்றப்படுகிறது.

## சாக்தம்

சக்தியை முழுமுதலாகப் போற்றும் சாக்தம், ஆரம்பத்தில் சைவத்துடன் பிரிவின்றி ஒன்றாகவே வளர்ந்து வந்த சமயம். இன்றைக்கு வங்கப்பகுதியும், தென்னகமும் முக்கியமான சாக்த மையங்களாக அமைந்துள்ளன.

வடநாட்டில் சக்தியைப் பயங்கர வடிவில் வழிபடும் காளிகுலம் புகழ்பெற்றது. தென்னாட்டுச் சாக்தம் "ஸ்ரீகுலம்" என்று அழைக்கப்பட்டது. அது காளிகுலம் போலன்றி, சக்தியை "இராஜராஜேஸ்வரி" என்ற வடிவில் பேரழகியாக — காமேசுவரியாகப் போற்றுகின்றது.

## சுமார்த்தம்

சுமார்த்தம் இன்றுள்ள பெரும்பாலான பிராமணர்களால் கடைப்பிடிக்கப் படும் நெறி. தமிழ்ப் பிராம்மணர்கள் எல்லோருமே சுமார்த்தர்கள் அல்ல என்பதை இங்கு நாம் நினைவுகூறவேண்டும். ஐயங்கார் என்று அழைக்கப்படும் வைணவப்பிராமணர்கள் பெரும்பாலும் ஸ்ரீவைணவத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். குருக்கள் என்று அழைக்கப்படும் ஆதிசைவர்கள் பொதுவாக சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள். எஞ்சியுள்ள வைதீகப் பிராமணர் எனப்படும் அத்துவைதப் பின்பற்றுநர்களே சுமார்த்தர்கள். "சுமார்த்தம்" என்றால் ஸ்மிருதிகளின் வழியில் (சமூகநீதி நூல்கள்) நடப்பவர்கள் என்று பொருள். வைதிகக் கிரியைகளில் நாட்டம் கொண்ட சுமார்த்தர்கள், தத்துவார்த்தத் தளத்தில் தாம் ஆதிசங்கரர் அருளிய அத்துவைதத்தைக் கடைப்பிடிப்பதாக சொல்லிக்கொள்கின்றனர். ஆனால், 'வேத வேள்விகளுக்கு மேல் தெய்வமில்லை' எனும் மீமாம்சக் கோட்பாடே சுமார்த்தர்களின் வரலாற்று பூர்வமான நெறி என்பது அவர்கள் பொதுவாகச் செய்யும் புரோகிதப்பணியை நோக்கும் போது தெளிவாகின்றது.

சிவன், விஷ்ணு, சக்தி, சூரியன், பிள்ளையார் ஐவரையும் பரம்பொருளின் ஐந்து சமமான அம்சங்களாகக் கருதி வழிபடும் "பஞ்சாயதன பூசை" சுமார்த்தர்களுக்குக் கட்டாயமாக விதிக்கப்பட்ட ஒன்று. (இந்த ஐவருடன் முருகனையும் சேர்த்து ஆறு உபாசனா தெய்வங்களின் வழிபாடாகவே பிற்காலத்தில் சண்மதஸ்தாபனம் எனும் கோட்பாடு முன்வைக்கப்பட்டது.) சைவ சித்தாந்தம், இராமானுஜர், மத்துவர் முதலானோரின் வைணவத் தத்துவங்களுடன் ஆதிசங்கரரின் அத்துவைதம் முரண்படுவதால், இவர்கள் தனிப்பிரிவாகக் கருதப்படுகின்றனர். பகவத் கீதை, பிரம சூத்திரம், உபநிடதங்கள். ஆகிய மூன்றும் சுமார்த்தர்களால் "பிரஸ்தானத்திரயம்" என்ற பெயரில் போற்றப்படுகின்றன.

சைவம், வைணவம், சாக்தம், சுமார்த்தம் ஆகிய நான்கும், இந்து சமயத்தில் மரபார்ந்த பிரிவுகள். நவீனகாலத்திற்கேற்ப இன்னும் இரு பிரிவுகள் சொல்லப்படுவதுண்டு. அவை வருமாறு:

## புத்திந்து

சமகாலத்தில் உருவான, உருவாகிவரும் எல்லா இந்து மறுமலர்ச்சி அமைப்புகளையும் நிறுவனமயப்படுத்திய இந்து அமைப்புகளையும் "புத்திந்து" (Neo Hindus) எனலாம். அதாவது, மேற்கூறிய நான்கு மரபார்ந்த பிரிவுகளிலும் இருந்து ஒரு சமய நிறுவனம் தன்னைத் தனித்துவப்படுத்திக் காட்டும் நவீன சிந்தனைகளைத் தன்வசம் கொண்டிருந்தால் அதைப் புத்திந்து என வரையறுக்கலாம்.

கி.பி 19ஆம் நூற்றாண்டில், பிரித்தானிய ஆட்சிக்காலத்தில், மேலைத்தேயத் தத்துவங்களுடன் இந்திய மரபுக்கு ஏற்பட்ட விவாதங்களால் உருவானவை இவை. பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண மிஷன், சின்மயா மிஷன் முதலானவை முக்கியமான புத்திந்து அமைப்புகள். குறிப்பிட்ட குருதேவர்களை இறையவதாரமாகப் போற்றும், சத்திய சாயி சமிதி, பிரம்ம குமாரிகள், அம்மா பகவான் ஏகத்துவ இயக்கம் போன்றனவும் புத்திந்து அமைப்புகள் தான். வைணவத்தை நிறுவன மயப்படுத்தி முன்னெடுக்கும் இஸ்கோனையும், சாக்தத்தை அமைப்புரீதியாக முன்னெடுக்கும் மேல்மருவத்தூர் சக்தி இயக்கத்தையும் ஒரு விதத்தில் புத்திந்து அமைப்புகளாகக் கருதலாம்.

புத்திந்து அமைப்புக்கள் பெரும்பாலும் தமக்கென ஒரு குருவை, அல்லது குரு பரம்பரையைக் கொண்டிருக்கின்றன. சிலவேளைகளில், முந்திய நான்கு கிளைகளும் மரபாக ஏற்றுக்கொள்ளும் மூலநூல்களைத்

தவிர்த்து, அக்குருவின் அருள்மொழிகளையே இவற்றின் பின்பற்றுநர்கள் மையமாகக் கொள்வர். இன்னும் சிலர், அக்குருதேவரை இறை அவதாரமாகவும், வழிபாட்டு மூர்த்தியாகவும் வளர்த்தெடுப்பதுண்டு. மரபார்ந்த இந்துப் பண்பாட்டு நெறிகளைக் கடைப்பிடிப்போரை விட, புத்திந்துக்கள் நன்கு நிறுவனப்படுத்தப்பட்டிருப்பர்.

## அக இந்துக்கள்

மேற்கூறிய ஐந்து வகைப்பாட்டிலும் தன்னை அடக்கவிரும்பாது, ஆனால் இந்து மெய்ஞ்ஞானத்தின் வாரிசு என்று தன்னை அடையாளப் படுத்த விரும்பும் ஒருவன், தன்னை "அக இந்து" (Internal Hindus) என்று சொல்லிக்கொள்ளலாம். உதாரணமாக, "அசிந்தியன்" எனும் முழுமுதல் தெய்வத்தை வழிபடும் இந்தோனேசிய இந்து, தன்னை அக இந்துவாக அடையாளப்படுத்திக்கொள்ளலாம். மறைந்து போன அல்லது புதிதாகத் தோன்ற இருக்கும் இந்துப் பண்பாட்டுக் கிளைகளைப் பற்றி ஆய்வுகளோ கற்கைகளோ மேற்கொள்ளும் போது, அவற்றுக்கென ஓரிடம் இந்துப் பண்பாட்டில் இருப்பது அவசியம். இந்த வகையில் மீமாம்சம், சாங்கியம் முதலான இந்து தரிசனங்களை - தத்துவங்களைத் தனியே கடைப்பிடித்தோரையும், தமக்கென தனித்துவமான மரபுகளைக் கொண்ட இந்துப் பழங்குடிகளையும், சைவத்தையோ வைணவத்தையோ சாராத நாட்டார் நம்பிக்கைகளையும் கூட அக இந்துக்களாகக் கொள்ளலாம்.

அவ்வளவு தான். இனி இவற்றில் தான் எந்த வகைப்பாட்டில் அடங்குபவன் என்ற தெளிவு ஒவ்வொரு இந்துப் பண்பாட்டாளருக்கும் இருக்கவேண்டும்.

## ஈழச்சைவம்

இனி இலங்கையை எடுத்துக் கொண்டோமென்றால், ஈழத்தவர்கள் பண்டுதொட்டே சைவர்கள். தவிர, சைவம் தமிழோடு ஆழ்ந்த பிணைப்பைக் கொண்டது. எனவே தமிழ்ப்பண்பாடு என்பது மறுக்கமுடியாமல் சைவப்பண்பாடு தான். இன்று இஸ்கோன் மூலம் கௌடிய வைணவமும், வேறு பல புத்திந்துக் கொள்கைகளும் இலங்கைத் தமிழர் மத்தியில் ஊடுருவி வருகின்றன. மேலும் இந்துவெனும் பொதுப்பெயரில் சுமார்த்தமதத்தாரான சங்கராச்சாரிய மடத்தின் கொள்கைகளே பெரிதும் பரப்பப்பட்டவாறுள்ளன. சைவத்துக்கு ஏற்பட்ட பொருளாதார – அரசியல் நலிவும் வேறு சமூகக் காரணிகளும் அதற்கு இன்னொரு காரணம் என்பதும் உண்மை.

புத்திந்து அமைப்புக்கள், ஒருவனது பாரம்பரியத்தை – மரபுத் தொடர்ச்சியை அறுத்தெறிந்து விட்டே அவனைத் தன்னோடு

அணைத்துக்கொள்கிறது. புத்திந்து அமைப்புக்களின் மிகப்பெரும் கீழ்மை அது! அந்தப் புத்திந்து அமைப்புக்கும் கடவுளை வியாபாரப் பண்டமாக்கி வீதியோரங்களில் விலைகூவும் மதமாற்ற அமைப்புகளுக்கும் எந்த வேறுபாடும் இருக்கமுடியாது! ஒரு சைவன் புத்திந்து அமைப்பொன்றின் வசம் ஈர்க்கப்படல் அவனது தனிமனித உரிமை என்று சொல்லி விலகினாலும், புத்திந்துக்களாக விளங்கும் சைவ சகோதரர்கள், தம் மரபுத்தொடர்ச்சியை இழக்கக்கூடாது - தம் சைவப்பண்பாட்டைக் கைவிடக்கூடாது என்பதை இத்தால் வலியுறுத்த விரும்புகிறோம். அது தற்போது அச்சுறுத்தலுக்குள்ளாகி வரும் தமிழர் என்ற இன அடையாளத்துக்கும் ஆபத்து என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இது ஒரு புறம் இருக்க, நம் மத்தியில் சைவராகப் பிறந்து, ஆனால் சைவத்தை கடுமையாக விமர்சிக்கும் போலி முற்போக்குவாதிகளும், இறைமறுப்பர்களும் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஆனால், முற்போக்கு என்ற பெயரில் அவர்கள் தமிழர் நலன்சார் அரசியல் பேசும் போது, சிரிப்புத்தான் வருகிறது. ஏனென்றால், தமிழர் என்ற அடையாளம் மொழிவழியாக - இனம் வழியாக உருவாகி வந்தது. அந்த மொழிவழி இனத்துக்கு பண்பாட்டு வரையறையைக் கொடுத்தது அதன் பெரும்பான்மைச் சமயம். இலங்கையில் தமிழரைப் பொறுத்தவரை அந்தப் பெரும்பான்மைச் சமயம், சைவம். எனவே சைவத்தைப் புறக்கணித்துவிட்டு தமிழியம் பேசுவது போன்ற முரண்நகை வேறெதுவும் இல்லை.

அவர்களில் சிலர் நவீனயுகத்தில் மதங்கள் தேவையில்லை, எனவே சைவம் அழியட்டும் என்று கோஷமிடுகிறார்கள். சரி. அழியட்டும். ஆனால், மற்றைய சமயங்கள் நீடிக்கும் போது சைவம் மட்டும் ஏன் அழிய வேண்டும்? அவர்களது கோஷம் தவறு என்பதை நிரூபிப்பதற்கேனும், உலகின் ஏனைய பெரும்பான்மை மதங்கள் நீடிக்கும் வரை, நம் மதமும் கூடவே நீடித்து நிலைக்க வேண்டும்.

ஏனைய மதங்கள் போல, பின்பற்றுநனை இறுக்கமாக வைத்திருக்கும் பொறிமுறை எதுவும் சைவத்தில் இல்லை. எனவே தூரநோக்கில்லாத போலிகள்வசம் ஈர்க்கப்பட்டு, நம்மவர் பாழாய்ப் போக வாய்ப்புகள் உள்ளது. அதைத் தடுக்க – தவிர்க்க வேண்டும். தன் மரபார்ந்த சமயம் என்ற ரீதியில் இலங்கையிலுள்ள தமிழர் யாவரும் சைவத்தை, அதிலும் சைவ சித்தாந்தத்தைக் கசடறத் தெரிந்திருக்கவேண்டும். அதன் செழுமையையும் முழுமையையும் அடுத்துவரும் தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.

**திரு.வி.துலாஞ்சனன்**



# சைவசமயத்தில் வழிபடு கடவுள்

**சை**வசமயத்தவரின் முழுமுதற்தெய்வம் சிவபெருமானாவார். அச்சிவபெருமானை வழிபடுவோரே சைவர் எனப்படுவர். அப்படியானால், உமாதேவியார் யார்? அவருக்கும் சிவபெருமானுக்குமான சம்பந்தம் என்ன? உமாதேவியாரை வழிபடுபவர் சாக்தரா? இப்படியான கேள்விகள் இன்றைய ஸ்மார்த்த இந்துமதத் தாக்கத்தால் பலரிடம் எழலாம். சைவமரபில், சிவபெருமானின் திருவருட்சத்தியையே உமாதேவியார் என்கின்றோம். அபிராமி அந்தாதி பாடிய அபிராமிப் பட்டர், உமாதேவியாரை சிவபெருமானின் திருவருட்சத்தியாகவே பாடினார். சைவநாயகியாகவே கொண்டாடினார். சாக்ததெய்வமாக அல்ல! அதுபோலவே, "மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மைக் குறம்" என்று உமாதேவியாரை குமரகுருபரப் பெருமானும் சைவ இறைவியாகவே கொண்டாடினார். அதுவே தமிழர் மரபாகும்.

சரி, முருகன் யார்? அவர் கௌமாரக் கடவுளா? என்ற கேள்விகள் சிலரிடம் எழலாம்.

கற்றாருக்குப் பஞ்சமான இக்காலத்தில் மற்றோரெல்லாம் சமய அறிஞராக உலாவுவதால் வந்த விளைவுகளில் ஒன்று முருகனைக் கௌமாரக் கடவுளென்பது.

முருகன் சிவபெருமானின் திருவடிவாகும். சைவசமயத்தில் முருகனைப் பிறந்ததாகக் கூறும் மரபில்லை. உதித்தனன் என்றே கந்தபுராணம் கூறும். அதாவது, சிவபெருமானாய் என்றும் உள்ள பொருள், முருகனாக உதித்ததாகவே கந்தபுராணம் முருகனைக் கொண்டாடுகின்றது. பகலவன் காலையில் உதித்தனன் என்பதால், இரவிலும் தோன்றாத்துணையாக நின்றான் என்றே பொருளாகும். அதாவது என்றும் உள்ள சூரியனின் இயல்பு உதித்தல் என்ற சொல்லூடாக உணர்த்தப்படுகின்றது. அதுபோலவே, உதித்தனன் உலகமுய்ய என்று கந்தபுராணம் கொண்டாடும் முருகனுமாம்.

நக்கீரர், கச்சியப்பர், குமரகுருபரர், அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள் என்று எவரும் முருகனைக் கௌமாரக் கடவுளாகக் குறிப்பிடவில்லை. முதல் பத்தி இலக்கியம் என்ற சிறப்பை உடைய திருமுருகாற்றுப்படையில், முருகன் சிவபெருமானின் மைந்தனாகவே சுட்டப்படுதல் நினைவில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

ஆல்கெழுகடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே - திருமுருகாற்றுப்படை

ஆறுமுகச்சிவனாக, சைவ நாயகனாக முருகப் பெருமானைக் கொண்டாடிவருவதே தமிழர் சமய மரபு. அந்த சிறப்பான சைவமரபுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கில், ஸ்மார்த்த சங்கரமடத்தாரால் உருவாக்கிய சண்மதப் போலியே கௌமாரம்.

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிதுமேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி தன்னில் சேர்வர்
அந்தமில் அவுணர்தங்கள் அடல் கெட நின்ற செவ்வேள்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே

இவ்வாறு முருகவழிபாட்டின் பயன் சிவகதியே என்று கச்சியப்ப சிவாச்சாரியார் காட்டுகிறார்

மைத்தகு மேனி வாளரக்கன் தன்மகுடங்கள்
பத்தின திண்தோள் இருபதும் செற்றான் பரங்குன்றைச்
சித்தம தொன்றிச் செய்கழல் உன்னிச் சிவன் என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே

என்று திருப்பரங்குன்றை சிவத்தலமாகவே பாடுகின்றார் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

தெய்வநசை முன் தந்தான் தெய்வப்பிரதான
சைவநசை பின் தந்தான் சாற்று எனக்குச் - சைவமுடி
வாகிய சித்தாந்த நசை தந்தான் அதன்பின் மெய்
யோக நசை தந்தான் சேயோன் - குமரகுருதாசர் (பாம்பன் சுவாமிகள்)

குமரகுருதாச சுவாமிகளான பாம்பன் சுவாமிகள் சைவநெறியின் பரம்பொருளாக முருகனையே குறிப்பிடுகிறார்.

தமிழ்மரபில்த் தோன்றிய, முருகனைத் தரிசித்த, ஞானியர் எவரும் கௌமாரமெனும் ஸ்மார்த்தசமய வழக்கை ஏற்றில்லை என்னும்போது, தமிழர்மரபு எதுவென்பது விளக்கமுறும்.

"பிள்ளையார் காணபத்திய இறைவரா?" என்றொரு கேள்வியும் இந்த சுமார்த்தமதத்தின் சண்மதக் கொள்கையால் நம்மவரிடம் துளிர்விடுவதுண்டு! நம்பியாண்டார் நம்பிகள் முதலிய பிள்ளையாரின் அடியவர் யாவரும் சைவ முதல்வனாகவே பிள்ளையாரைக் கொண்டாடினர். காணாபத்தியராக அல்ல!!!

பிள்ளையார் வழிபாட்டை தமிழ்மரபில் வளர்த்த ஔவையார் தனது விநாயகர் அகவலில்

"சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி"

என்று சைவவழிபாடாகத்தான் காட்டுகின்றாரே தவிர, காணாபத்தியம் என்னும் தனிவழிபாடாக அல்ல. காணாபத்தியம் என்னும் இடைச்செருகல் சைவ சமயத்தைச் சீர்குலைப்பதன்பொருட்டு, ஸ்மார்த்தமதத்தார் உருவாக்கிய சண்மதக் கொள்கையின் விளைவென்பதையும் அதனையும் நம்தமிழர் மரபு ஏற்றிருக்கவில்லை என்பதையும் இவற்றால் விளக்கமுறும்.

"திருமால் சைவக் கடவுளா?" என்றும் சிலர் குழப்பமுறுவர். திருமால் சைவத் தெய்வமேயாகும். திருமாலில் இருவகை உண்டு. ஒன்று அனுபட்சம். இது ஆன்மாக்கள் தமது புண்ணியப்பேற்றின் பலனால் பெறுகின்ற திருமால்ப் பதவி. சைவசமயப்படி, தசாவதாரங்கள் இந்த அனுவர்க்கத்துக்குரியனவாகும். அதாவது, ஆன்மா திருமால்ப் பதவியைப் பெற்றிருக்கும்போது அதனுடைய ஆணவமல வாசத்தால் பெற்ற பிறப்புக்கள். இராமர், கண்ணபிரான் யாவரும் சைவசமயப்படி திருநீறு பூசிய சிவனடியாரேயாம்.

"ராமம்...பஸ்மோத் தூளித சர்வாங்கம்" - ராம ரஹஸ்ய உபநிஷத்

இதன் பொருள், "இராமர் சர்வ அங்கங்களிலும் விபூதிதாரணமுடையார்" என்பதாகும்.

தன் திருவெம்பாவையில், சிவனடியவன் ஒருவனின் பத்தியை ஒப்பிட வந்த மணிவாசகர், "ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ" என்று திருமாலையே (அனுபட்சம்) சிவபக்தர்களுக்கான உதாரணபுருசனாகக் காட்டுகிறார்.

சிலசமயம், சிவபெருமானே திருமால் வடிவெடுப்பதும் உண்டு. அவ்வாறான வடிவு சம்புபட்சம் எனப்படும். சம்புபட்சத் திருமால் சிவபெருமானேயாவார். அவரே சிவபெருமானின் ஒரு சத்தியாகவும் விளங்குகின்றார்.

அதர்வண வேதத்திலுள்ள பஸ்மஜாபால உபநிஷத். "பஸ்மதிக் தாங்கா ருத்திராக்ஷா பரணா :தக்ஷிணாயாந் திகி விஷ்ணு" என்று கூறுகிறது. "திருமால் காசி ஷேத்திரத்திலே தென்திசைக்கணிருந்து. விபூதி ருத்திராக்ஷ தாரணமுடியவராய் உபாசிக்கின்றனர்" என்பது பொருள்.

ஒருவனே மூவர் என்றும் ஒன்பது தினமும் அன்பால்
பரமனை அருச்சித்தாரும் பாம்பு அணைப் பள்ளி வள்ளல்
புரம் அதுபொருந்தி வாழ்வர்
- சிவதருமோத்தரம் (சைவ உப ஆகம நூல்)

பாம்பு அணைப் பள்ளியானைப்
பழிமொழி பகர்ந்த பாவி
கோம்பியாய் உதர அங்கி
கூர்ந்திடக் குலையும் - சிவதருமோத்தரம் (சைவ உப ஆகம நூல்)

சிவபெருமானே மூவராயும் உள்ளாரென்று சம்புபட்சமாய்க் கருதி. நாராயணனை வழிபடுபவர் வைகுண்டம் அடைந்து இன்புறுவர் என்றும். நாராயணனை நிந்தனை செய்பவன் ஓணானாகப் பிறந்து துன்புறுவான் என்றும் சைவ உபாகம நூலான சிவதருமோத்தரம் உரைக்கின்றது.

இந்த சம்புபட்ச வழிபாட்டில். திருமால் திருநீறுதாரியாக விளங்குதல் வேண்டும்.சைவாகம வழியில் பூசைகள் நடைபெறுதல் வேண்டும். திருநீறே பிரசாதமாக இருத்தல் வேண்டும். திருமுறைகளோடு. திவியபிரபந்தங்கள் பாடப்படவேண்டும்.

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் - சக்கரமும்
சூழ்அரவும் பொன் நாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து - பேயாழ்வார்

பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருவரங்கத்தால் திரிவரேனும் ஒருவன்
ஒருவன் அங்கத்தென்றும் உளன் - பொய்கை ஆழ்வார்

சம்புபட்சமாக இருக்கும்போது. சிவமும் திருமாலும் ஒன்றேயெனும் ஆகமவழக்கு சைவசமய ஆகமவழக்கேயாம். அதுபோல் சங்கர நாராயணர்

வடிவமும் சிவபெருமானின் மூர்த்தங்களில் ஒன்றாகச் சைவசமயம் மட்டுமே கூறுகின்றது. வைணவம் முதலிய ஏனைய மதங்களின் ஆகமங்களில் இவ்வடிவங்கள் இல்லை. ஆனால், வைணவத்தின் ஆழ்வார்கள் இவ்வடிவத்தையும், சம்புபட்சத் திருமாலும் சிவபெருமானும் ஒன்றேயெனும் கருத்தையும் முன்வைத்துப் பாடியுள்ளமைகொண்டு, ஆழ்வார்களும் சைவாகம வழியிலேயே திருமாலை வழிபட்டனர் என்பது தெளிவாகும். இந்த மரபை இன்றும் தொடர்வது தான் ஈழத்துச் சைவ சமயம் ஆகும்.

இலங்கையில் பண்டுதொட்டு இச்சம்புபட்சத் திருமால் வழிபாடே விளங்கிவந்தது. தற்போதும் வல்லிபுர ஆழ்வார் ஆலயம், பொன்னாலை வரதராசப் பெருமான் ஆலயம் என்பவற்றிலும் இவ்வழிபாடேயாம். பிள்ளையார் பூசை உட்பட, சைவாகம வழிபாடேயாம். எனினும், இன்றைய ஸ்மார்த்த இந்துமதத்தாக்கத்தால், சைவாகம வழிபாட்டு விதிகள் பல கைவிடப்பட்டுவருவது தமிழரின் தவக்குறைவேயாகும். திருமாலைச் சிங்களவர் தமக்கேற்றவாறு உருவம்வரைந்து சிங்கள பௌத்தமயப்படுத்தி வழிபடும்போது, தமிழர்களாகிய நாம், திருமால் வழிபாட்டில் சைவாகமத்தைப் புறக்கணிக்கிறோம். திருமால் ஆலயங்களிற் பூசைசெய்யும் அந்தணரும், ஆலய நிர்வாகத்தாரும், உரிமையாளர்களும் சமய உண்மைகளை உள்ளபடி உணர்ந்து ஒழுகுதலே கற்றாருக்கு அழகாகும்.

சைவசமயத்தின் வழிபடுகடவுள் சிவபெருமானேயென்றும், அச்சிவபெருமானின் வடிவங்களே உமாதேவியார், முருகன், பிள்ளையார், சம்புபட்சத்திருமால், வைரவர், வீரபத்திரர் முதலிய மூர்த்தங்கள் என்றும் உணர்ந்து, சைவாகமவழியில் அச்சிவமூர்த்தங்களை வழிபட்டு ஒழுகுதலே சைவக்கற்புடைமைக்குச் சால்பாகும். அங்ஙனம் ஒழுகாதோரும், சைவத்துக்கு முரணான வழிபாடுகளைத் திணிப்போரும், சைவாகமப் பண்பாடுகளைத் தவிர்ப்போரும், சைவாகமப்படி பதிதராவர்.

**மருத்துவர் திரு.கி.பிரதாபன்**



# சைவ சமய நூல்கள்

(ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் வேதாகமவியலைத் தழுவியது)

உலகத்திற்கு கர்த்தாவும் நித்தியரும் சர்வவியாபகரும் அநாதிமலமுத்தரும் சர்வஞ்ஞரும் சர்வகர்த்தாவும் நித்தியானந்தரும் சர்வசுதந்திரருமாய் உள்ள சிவபெருமான், தனு கரண புவன போகமெனும் பிறப்பு இறப்பு சூழலிலிருந்து ஆன்மாக்கள் கடைந்தேறும் பொருட்டு வேதங்களையும் ஆகமங்களையும் அருளிச்செய்தார். எம்பெருமான் அநாதியானவர். ஆதி அந்தம் அற்றவர். அவர் அருளிச் செய்த வேத, ஆகமங்களும் அநாதியானவை. வேதமும் ஆகமமும் இறைவனுடைய அம்சமாகப் போற்றப்படுகின்றன. வேதமும் ஆகமமும் சைவசமயத்தின் முதல் நூல்கள். வேத, ஆகமங்களில் கூறப்படும் உண்மையையும் வழிபாட்டு முறைகளையும் வாழ்வியல் ஒழுக்கமுறைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம், ஆன்மாக்கள் பாசவினை நீங்கி சிவத்தை அடையமுடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை. வேதம் சுருதி, நிகமம் எனவும், ஆகமங்கள் தந்திரம், மந்திரம், சித்தாந்தம் எனவும் சிறப்புப் பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன.

வேதங்கள் சதாசிவமூர்த்தியின் தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத முகங்களிலிருந்து அருளிச்செய்யப்பட்டவையாகும். வேதம் கர்மகாண்டம், ஞானகாண்டம் என இருவகைப்படும். ஞானகாண்டம் பிரம்மகாண்டமென்றும் (அறிவுதரும் பகுதி) அழைக்கப்படும். அதேபோல், கர்மகாண்டம் (சமய ஆச்சாரங்களை உள்ளடக்கியது) உபாசனா காண்டம் என்றும் வழங்கப்படும்.

நால்வேதங்களிலும், சம்கிதா, பிராம்மணம், ஆரண்யம், உபநிடதம் என நான்கு பகுதிகள் உண்டு. சம்கிதைகள் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. வேதத்தின் முக்கிய பகுதியாகவும் முன்னைய பகுதியாகவும் அமைந்துள்ளன. ஒரே பரம்பொருள் பலவடிவங்களாக காட்சியளிக்கின்றது. அவ்வடிவங்களாக விளங்கும் மூலப்பரம்பொருளை

போற்றும் மந்திரங்களாகிய துதிப்பாடல்கள் சம்கிதைகள் எனப்படும். இவை விசேடமாக மந்திரம் என்று பெயர்பெறும். பிராம்மணம் என்பவை யாகங்கள், வழிபாடுகளை செய்வதற்கு பின்பற்ற வேண்டிய சடங்குகளை பற்றிக் கூறும் பகுதிகளாகும். ஆரண்ய எனப்படும் பகுதிகள் சமயச் சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை தொடர் உருவகக் கதைகளாக சொல்லுகின்றன.

உபநிடதங்கள் மெய்யியல் அல்லது இறைதத்துவம் பற்றிய தத்துவ ஆராய்ச்சிப் பகுதிகள். இவை வேதத்தின் ஞானகாண்டத்திற்குரியவை. வேதாந்தம், வேதசிரசு எனவும் அழைக்கப்படுபவை. வேதத்தின் அங்கங்கள் ஆறாகும். அவை "ஷடங்கம்" எனப்படும். சிஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் ஆறுமாம்.

வேதங்களை உதாந்தம், அநுதாந்தம் முதலிய சுரவேறுபாட்டினால் உச்சரிக்கும் முறைமை சிஷை எனப்படும். கற்பவாது வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுட்டிக்கும் முறை. வியாகரணமாவது வேதங்களில் எழுத்துச் சொற்பொருளிலக்கணங்களை அறிவிப்பது. நிருத்தமாவது வேதங்களின் சொற்களுடைய பொருளை அறிவிப்பது. சந்தோவிசிதி என்பது வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரையும் அவ்வவைகளுக்குரிய எழுத்து இவ்வளவென்பதையும் குறிப்பிடும். வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்வதற்கு உரியகால விசேஷங்களை அறிவிப்பது சோதிடம்.

வேதத்திற்கு புராணம், நியாயம், மீமாம்சை, ஸ்மிருதி ஆகிய நான்கும் உபாங்கமாகும். புராணம் பரமசிவன் உலகைப் படைத்து அழித்தல் முதலியவற்றைக் கூறும். அவை வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி, விரித்து அறிவிப்பன. உலகின் தோற்றம், ஒடுக்கம், பாரம்பரியம், மன்வந்திரம், வம்சம் என்று ஐந்தையும் கூறலால், புராணம் பஞ்சலக்கணம் எனப்படும். மூலபுராணங்கள் 18. பிரம்மம், பத்மம், விஷ்ணு, சிவ, பாகவத, பவிஷ்ய, நாரதீய, மார்க்கண்டேய, ஆக்னேய, பிரம்மவைவர்த்த, இலிங்க, வராக, வாமன, கூர்ம, மத்ஸய, கருட, ஸ்காந்த, பிரமாண்ட புராணங்களே அவையாம். சைவசமயப் புராணங்கள் சத்துவ புராணங்களெனப்படும். ஏனையவை ராஜச, தாமச புராணங்களாகும்.

வேதப்பொருளை நிச்சயித்தற்கு அனுகூலமாகிய பிரமாணம் முதலியவைகளை அறிவிப்பது நியாயம். வேதப் பொருளினுடைய தாற்பரியத்தை அறிதற்கு அனுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது மீமாம்சை. இது பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை

என இருவகைப்படும். பூர்வமீமாம்சை கர்மமீமாம்சை எனவும் உத்தர மீமாம்சை பிரம்மமீமாம்சை, வேதாந்த சூத்திரம் எனவும் வழங்கப்படும். ஸ்மிருதியாவது வருணங்களுக்கும் ஆச்சிரமங்களுக்கும் உரிய தர்மங்களை அறிவிப்பது

உபவேதங்கள் நான்கு. ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்தவேதம் என்பவையே அவையாகும். ஆயுர்வேதம் மருத்துவத்தையும், தனுர்வேதம் படைக்கலப் பயிற்சியையும், கந்தர்வ வேதம் இசை முதலிய கலைகளையும், அர்த்தவேதம் இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களை சம்பாதிக்கும் உபாயத்தையும் அறிவிப்பதாகும். சிவரகசியம், இராமாயணம், மகாபாரதம் ஆகிய மூன்றும் இதிகாசம் எனப்படும்.

வேதங்கள், வேதாங்கம், உபாங்கம், உபநிடதங்கள் முதலியன வற்றுக்கு விளக்கவுரைகள் பாஷ்யங்கள் என்னும் பெயரில் பலரால் எழுதப்பட்டிருப்பினும், சிவபரத்துவ பாஷ்யங்களே சைவசமயத்திற்கு உரியனவாகும். கிரியை அனுஷ்டானத்திற்கும் அவ்வாறே கடைப்பிடிக்கப்படவேண்டும்.

வேதம் பொதுநூல் என்றும் சிவாகமங்கள் சிறப்பு நூலென்றும் வழங்கப்படுவது சைவமரபாகும்.

ஆ-சிவஞானம், க-வீடுபேறு, ம-மலநாசம் என்று பொருள் கொள்ளப்படுமாயின், ஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தைபோக்கி, ஞானத்தை உதிப்பித்து, வீடு பேற்றை கொடுப்பதற்காக அருளப்பட்டதென்று பொருள்தரும்.

ஆ-பசு,க-பதி,ம-பாசம் என்று பொருள்கொள்ளப்படுமாயின், பதி, பசு, பாச முப்பொருள் உண்மையை உணர்த்தும் நூலென்று பொருளப்படும்.

ஆ-வழிமுறை, கம-வருதல் என்று கருதப்படுமாயின், இறைவனிடம் இருந்து வருவது எனவும், தொன்றுதொட்டு வரும் அறிவு எனவும் பொருள்ப்படும். 28 ஆகமங்களும் சதாசிவமூர்த்தியின் ஈசான முகத்தினின்று தோன்றின.

காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம் ஆகிய ஐந்தும் கௌசிக முனிவருக்கும், தீப்தம், சூக்சுமம், சகஸ்ரம், அஞ்சுமான், சுப்பிரபேதம் ஆகிய ஐந்தும் காசிபமுனிவருக்கும், விஜயம், நிஸ்வாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம் ஆகிய ஐந்தும் பரத்துவாஜ முனிவருக்கும்,

ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் ஆகிய ஐந்தும் கௌதமமுனிவருக்கும், புரோஷிதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பரமேஸ்வரம், கிரணம், வாதுளம் ஆகிய எட்டும் அகத்திய முனிவருக்கும் அருளிச்செய்யப்பட்டவையாகும். காமிகம் முதல் வாதுளம் ஈறாக, 28 ஆகமங்கள் முதன்மையானவை .முதல் பத்து ஆகமங்களும் சிவபேதமென்றும், ஏனைய 18 ஆகமங்களும் உருத்திரபேதம் எனவும் அழைக்கப்படும்.

சதாசிவபெருமானின் பாதம் முதல் உச்சிவரை ஆகமங்கள் அனைத்தும் ஒவ்வொரு அங்கமாகத் தியானிக்கப்படுகிறது. சிவபெருமானே ஆகமங்களாக விளங்குவதால், "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார். காமிகம் - திருவடிகள், யோகஜம் - கணைக்கால்கள், சிந்தியம் - கால்விரல்கள், காரணம் - கெண்டைக்கால்கள், அஜிதம் - முழந்தாள், தீப்தம் - தொடைகள், சூக்ஷ்மம் - குய்யம், சகஸ்ரகம் - இடுப்பு, அம்சுமதம் - முதுகு,சுப்ரபேதம் - தொப்புள், விஜயம் - வயிறு, நிஷ்வாசம் - இருதயம், ஸ்வயம்புவம் - தனங்கள், ஆக்னேயம் - கண்கள், வீரம் - கழுத்து, ரௌரவம் - செவிகள், மகுடம் - கிரீடம், விமலம் - கைகள், சந்திரஞானம் - மார்பு, பிம்பம் - முகம், புரோத்கீதம் - நாக்கு,லளிதம் - கன்னங்கள், சித்தம் - நெற்றி, சந்தானம் - குண்டலம், சர்வோக்தம் - உபவீதம், பரமேஸ்வரம் - மாலை, கிரணம் - இரத்தினா பரணம், வாதுளம் - பரிவட்டம் (ஆடை). உபாகமங்கள் திருமேற் பூச்சும், பரிமளத்திரவியங்களும் புஷ்பங்களும், ஞானபாதமாகிய சித்தாந்தம் நைவேத்தியமும் ஆகும். நாரசிங்கம் முதல் விஸ்வகர்மம் ஈறாகிய 207 உபாகமங்களும் சைவமரபில் உண்டு.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் உடையவை சிவாகமங்களாகும். சிவாகமங்கள் கிரியாகாண்டம், ஞானகாண்டம் என்று இருவகைப்படும். கிரியா காண்டம் ஆலயப் பூசை நியதிகளையும், ஞானகாண்டம் பதி, பசு, பாச முப்பொருள் உண்மையையும் விளக்குகின்றன. சிவாகமங்களுக்கு சார்பு நூல்களாக அட்டபிரகரண நூல்கள் விளங்குகின்றன. தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத் திரய நிர்ணயம், இரத்தினத் திரயம், போக காரிகை, நாத காரிகை, மோட்ச காரிகை, பரமோட்ச நிராச காரிகை என்பனவே அட்டபிரகரண நூல்களாகும்.

தமிழ் வேதமாக பன்னிருதிருமுறையும் சாத்திர நூல்களாக பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களும் விளங்குகின்றன. நம்பியாண்டார்நம்பிகளால் மூவர் தேவாரங்களும் முதல் ஏழு

திருமுறைகளாக தொகுக்கப்பட்டன. இவை "அடங்கன் முறை" எனப்படும். எட்டாம் திருமுறையாக மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் விளங்குகின்றன. ஒன்பதாம் திருமுறையாக திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் திகழ்கின்றன. திருமூலரின் திருமந்திரம் 10ம் திருமுறையாக விளங்குகின்றது. இது தோத்திரத்தில் சாத்திரநூல் எனப்படும். பதினொராந் திருமுறையாக சிவபெருமானே எழுதிய திருமுகப்பாசுரம் அடங்கலாய், காரைக்கால் அம்மையார், பட்டினத்தார், நம்பியாண்டார்நம்பிகள், நக்கீரர் முதலியோர் பாடிய தோத்திரங்கள் விளங்குகின்றன. நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையும் இத்திருமுறையில் அடங்கும். முதற்பதினொறு திருமுறைகளும் நம்பியாண்டார்நம்பிகளால் தொகுக்கப்பட்டவையாகும். சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக சேர்க்கப்பட்டது.

தோடுடைய செவியனென்று "ஓ"காரத்தில் தொடங்கும் திருமுறை, பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணத்தில் உலகெலாம் என்று "ம்" காரத்தில் நிறைவுபெறுகின்றது. ஓம் எனும் பிரணவமந்திர சொரூபமாக திருமுறைகள் விளங்கும் சிறப்பு இதனால் விளக்கமுறும். சப்தகோடி மகாமந்திர ரூபமாக தேவாரம் 7 திருமுறைகளாகவும், பஞ்ச பிரம்ம மந்திர ரூபமாக பஞ்ச தோத்திர முறையும், சம்ஹிதா மந்திரரூபமாக 11 திருமுறைகளும் பிரகாச மந்திர ரூபமாக பெரியபுராணமும் என்றவாறாக தமிழ்வேதம் விளங்குகின்றது. தேவாரம் - ரிக்வேதம், திருவாசகம் - யசுர்வேதம், திருவிசைப்பா - சாமவேதம், திருப்பல்லாண்டு - அதர்வண வேதம், இதிகாச அடையாளமாக பெரியபுராணம் என்று தமிழ்வேதங்களைச் சைவச் சான்றோர் சிறப்பித்துக் கூறுவர்.

ஆகமங்களின் ஞானபாதமாக விளங்கும் சித்தாந்தம், பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களாகத் தமிழில் விளங்குகின்றது.

உந்தி களிறோ டுயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம் - வந்தஅருள்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பவையே தமிழிலுள்ள சைவசித்தாந்த சாத்திர நூல்களாகும்.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இருநூல்களும் காலத்தால் முந்தியவை எனினும், மெய்கண்டாரின் சிவஞானபோத நூலையே முதன்மையாகக் கொண்டு, பதினான்கு நூல்களும் மெய்கண்ட சாத்திரங்கள் என்று வழங்கப்படுகின்றன.

மெய்கண்ட சாத்திரங்களுள் அடங்கும், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு நூல்களும் உமாபதி சிவாச்சாரியரால் பாடப்பட்டவையாகும். இவை சித்தாந்த அட்டகம் எனப்படும்.

சில அறிஞர், மெய்கண்ட சாத்திரங்களின் பின்னரே சைவசமய மரபு உருவானதென்று கருதுவர். இக்கருத்து முற்றிலும் தவறு. நூல்வடிவம் அல்லாமல் வழக்கொழிந்து போயிருந்த சித்தாந்த உண்மையை, சிவபெருமானின் திருவருளால், சித்தாந்த ஆசிரியர்கள் பாடல்களாகப் பாடி, நூல்வடிவு கொடுத்தனர். சித்தாந்தம் என்பது அன்றும், இன்றும், என்றும் நிலைத்து நிற்கும் உண்மையாகிய சிவமே பரம்பொருள் என்ற முடிந்த முடிபாகும்.

**ருத்ர வைணீகஸ்ரீ, சாதக திலகம், மகாராஜ ஸ்ரீ,**
**யஜுர் வேதி தர்ஷக சர்மா பரத்வாஜ்** (L.L.B.)



# விடைக்கொடி

சமயங்களுள் மூத்த சமயம் நம் சைவ சமயம். சைவத்தின் முழுமுதலான சிவனுக்கு அச்சமயத்திலுள்ள அதே முதன்மை அவர்தம் திருக்கொடியான விடைக்கொடிக்கும் உண்டு. விபூதி, உருத்திராக்கம், சடாமுடி போன்ற சிவசின்னங்களுடன் விடைக்கொடியையும் சிவசின்னமாகக் கருதலாம்.

அறத்தின் வடிவமே வெள்விடை. அறம் செய்வோரையும், தர்ம சிந்தையுடன் இருப்போரையும், காத்தருள்பவன் எம்பெருமான். ஆகவே தான் அறக்கடவுள் இடபமாக வந்து ஈசனின் வாகனம் ஆனது. அதுவே அவர்தம் கொடியும் ஆனது.

தர்மதேவதையின் வடிவான விடை பற்றிய விரிவான குறிப்புகளை தேவாரங்களில் காணலாம். உதாரணமாக ஆளுடைய பிள்ளையாரின் தேவாரத்தை எடுத்துக்கொண்டால், திருக்கடவூர் மயானப்பதிகத்தில் விடையின் பெருமையை அருமையாக எடுத்துக்காட்டியுள்ளார்.

"பெரிய விடைமேல்"
"செங்கண் வெள்ளேறேறி"
"விடைமேல் வருவார்"
"வெள்ளையெருத்தின் மிசையார்"

போன்றன விடையைப் புகழும் திருமுறை வரிகளுள் குறிப்பிடத் தக்கவை. இனி, அத்தகைய விடை பொறித்த சிவனின் கொடியைப் புகழ்ந்து பாடப்பட்ட தனித்துவமான இலக்கியமாக, நம் சித்தாந்த நூல்களுள் ஒன்றான கொடிக்கவியைக் குறிப்பிடலாம்.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி. - கொடிக்கவி

உலகம் முழுவதும் பண்டைக்காலம் தொடக்கம் கொடி சுய அடையாளத்தைப் பேணுவதற்கான சின்னமாக விளங்கி வருகிறது. தமிழினத்தைப் பொறுத்தவரை, சேரர், சோழர், பாண்டியர் போன்ற மன்னர்கள், தமக்குச் சிறப்பாக முறையே வில், புலி, மீன் ஆகிய கொடிகளை வைத்திருந்ததுடன், தெய்வங்களுக்கும் தனித்தனியே சிறப்பான கொடிகள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக திருமாலின் கருடக்கொடி, முருகனின் சேவற்கொடி, பிரம்மனின் அன்னக்கொடி, மன்மதனின் மகரக்கொடி என்பவற்றைக் கூறலாம். இந்த வகையில் சிவனது கொடியாக விடைக்கொடி அமைந்திருக்கிறது.

சிவபெருமானே, பிள்ளையார், முருகன், உமாதேவியார், சம்புபட்ச நாரயாணன் என்பதாலும், சைவசமயமே அனைத்து தெய்வங்களினையும் சிவவடிவாய்க் கொண்ட சமயமாதலாலும், அதுவே, நான்மறை முடிபாக விளங்குவதாலும், பிள்ளையார், முருகன், உமாதேவியார், சம்புபட்ச நாராயணன் ஆலயங்களின் திருவிழாக்களிலும் விடைக்கொடியே சமயக்கொடியாகத் திகழ்வேண்டும். அதுவே சைவசமய ஆகமமரபாகும். தெய்வத்திற்குரிய விசேடகொடி ஆலயக்கோபுரத்திற்குரியதாகவும், சைவசமயக் கொடியான விடைக்கொடி ஆலயச் சூழலை அலங்கரித்து ஏற்றப்பட்டிருக்கவேண்டிய கொடியாகவும் சைவசமய மக்கள் பேணுவதே சிவபூமித் திருநாட்டிற்கும் சைவ உலகிற்கும் சிறப்புக்குரியதாகும். சைவசமயக் கடவுளர்கள் அனைவருக்குமான பொதுகொடியே, விடைக்கொடியென்ற தெளிவை சைவமக்கள் பெற்று, விடைக்கொடியை சிறப்புச்செய்தல் வேண்டும்.

இன்று இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் சைவ நிகழ்வுகள், ஆலயத்திருவிழாக்களில் எல்லாம் விடைக்கொடி ஏற்றப்படுகிறது. விடைக்கொடிச் செல்வர் சி.தனபாலா அவர்களின் அரியமுயற்சியின் பலனாகவும்,உலக சைவப் பேரவை போன்ற சைவ அமைப்புக்களின் ஈடுபாடு காரணமாகவும், சைவமக்கள் பெருமைப்படுமாறு, விடைக்கொடி உலகளாவியரீதியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

சிவராத்திரியை ஒட்டிய கிழமையில் விடைக்கொடி வாரமும் அனுட்டிக்கப்படுகின்றது. சைவர்களாகிய நாம், விடைக்கொடியின் மகத்துவத்தை உணர்ந்து, விடைக்கொடியினை ஆலயங்களிலும் வீடுகளிலும் திருவிழாக்களிலும் மாநாடுகளிலும் பட்டொளிவீசிப் பறக்குமாறு ஏற்றி, அதனைப் பெருமைப்படுத்தி, விடைக்கொடியினைக் கொண்டாடுவோம். நாமும் பெருமையடைவோமாக.

சைவசித்தாந்தரத்தினம்

**செல்வி. உதயகௌரி செல்வராஜ்**

# சிவபூமிச் சைவ முதலிகள்

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமி பெருமானார்



ஞானப்பிரகாச சுவாமிகள் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞானியர். யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

போர்த்துக்கேயர் தம் உணவின் பொருட்டு, சைவமக்கள் ஒவ்வொருவரும் தம்தம் முறைவரிசைக்கு அமைவாக, பசு கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர். ஞானப்பிரகாச சுவாமிகளின் முறை வந்த போது, "நீசன் கொன்று சாப்பிடும் பொருட்டு, பசுவை நான் கொடுப்பேனாயின், அப்பசுவைக் கொல்லுதலாகிய பாவம் எனக்கும் வந்தெய்துமே" என்று பயந்து இரவோடிரவாகப் புறப்பட்டு, யாழ்ப்பாணத்தை நீங்கி, சிதம்பரம் சென்றடைந்தார்.

அங்கு, சிவகங்கையில் தீர்த்தமாடி, மிளகும் சுத்தநீரும் மட்டுமே சாப்பிட்டுக்கொண்டு, நாற்பத்தைந்துநாள், சிவகாமியம்மை சந்நிதானத்திலே, உபவாசித்து, சிவகாமியம்மையின் அருளைப் பெற்றுக் கொண்டு, கௌடதேசத்திற்குச் (வங்காளம்) சென்றார். அங்கு பிராமண சந்நியாசி ஒருவருடைய குருகுலத்தடிக்குச் சென்று, அவர் பிராமண மாணாக்கருக்கு உபதேசிக்கும் தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை முதலியவற்றைத் தூரநின்று, கேட்டுணர்ந்தார். ஞானப்பிரகாசரை சூத்திரராகக் கருதிய அந்தப் பிராமணச் சந்நியாசி, இவரோடு ஒன்றும்

பேசாதேயிருந்தார். ஒருநாள், அவர் தம்பிராமண மாணவரைப் பரிசோதிக்குமாறு வினாக்களை வினவியபோது, அவர்கள் எவரும் உரிய விடைகளைக் கூறாதிருத்தலைக் கண்டு, வருந்தி, தூரநின்று எப்போதும் நியமமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஞானப்பிரகாசரை அழைத்து, "நீ இங்குவந்த நாள் முதலாகக் கேட்டவைகளைச் சொல்லு" என்றார். அப்போது, ஞானப்பிரகாசர், அனைவரும் அதிசயிக்கும்படி அனைத்துக்கும் விடையளித்தார். அப்பொழுது அப்பிராமண சந்நியாசி அவரைப் பார்த்து, **"நீயே பிராமணன்"** என்று சொல்லி, அவருக்குத் தர்க்கம்,வியாகரணம் முதலிய நூல்களைக் கிரமமாகப் போதித்தார். அதன்பின்னர், "நீ, தமிழ்நாட்டிற் சென்று அங்குள்ளவர்களுக்குப் பிரயோசனப்படுபவனாயிரு" என்று கட்டளையிட்டார்.

அக்கட்டளைப்படி, தமிழ்நாட்டிற்குத் திரும்பிய ஞானப்பிரகாசர், திருவண்ணாமலை ஆதீனத்திற்குச் சென்று, காவிபெற்றுத் துறவியானார். அங்கிருந்துசிதம்பரம்சென்றவர்,சிதம்பரத்திலேயேதங்கினார். சிதம்பரத்தில் இருக்கும் காலத்தில், பௌஷ்கர ஆகம விருத்தி, சிவஞானபோதம் ஆகிய நூல்களுக்கு வடமொழியில் வியாக்கியானங்களும், சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோக ரத்னம், சிவாகமாதி மாகான்மிய சங்கிரகம் நூல்களுமாக ஒன்பது வடமொழி நூல்களும், சிவஞான சித்தியார் உரை என்ற நூலைத் தமிழிலும் எழுதினார். திருவண்ணாமலை ஆதீனத்தில் தம்முடைய நூல்களை ஒப்பித்தார். ஶ்ரீலஶ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் சிதம்பரத்தில் ஞானப்பிரகாசம் என்னும் குளத்தினை வெட்டிக் கட்டுவித்தார். சிதம்பரத்திலிருந்தவாறே சிவபதம் பெற்றார். இவருடைய மரபிற் தோன்றியவரே ஶ்ரீலஶ்ரீ நாவலர் பெருமானார் ஆவார்.

இவர் சிவஞானசித்தியார் உரையில் சிவசமவாதத்தை முன்வைத்தார் என்று கருதும் சைவசித்தாந்திகளும் உளர். ஆனால் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் "நான் சிவசமவாதியல்லேன்" என்று சுவாமி ஞானப்பிரகாசரே கூறிய கருத்தின் வழி நின்று, அவரது சித்தியார் உரை, சிவசமவாத உரையல்ல என்று நிறுவியுள்ளனர். சித்தியாருக்குரிய அறுவர் உரையென்ற தொகுப்பில், ஞானப்பிரகாச சுவாமிகளின் உரையும் ஒன்றாக விளங்கும் சிறப்புடையதாகும்.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானார்

## (1822-1879)



நாவலர் விளக்கிய சைவாகம முடிவான சிவாச்சிரம முறையில் அமைந்த சாதியமைப்பு பெருமானாரின் பெருமையை உணர்த்தி நிற்கின்றது.

"சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தினுஞ் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி யுத்தி அநுபவமூன்றுக்கும் முழுமையும் விரோதம். உலகத்துச் சாதிபேதம் போலச் சற்சமயமாகிய சைவசமயத்தினும் முதற்சாதி இரண்டாஞ்சாதி மூன்றாஞ்சாதி நாலாஞ்சாதி நீச சாதியென சமயநடைபற்றி ஐந்து சாதி கொள்ளப்படும்.

சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாதமுறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சீவன்முத்தர் சிவமேயாவர். இனிச் சிவஞானிகள் முதற்சாதி சிவயோகிகள் இரண்டாஞ்சாதி சிவக்கிரியாவான்கள் மூன்றாஞ்சாதி சிவாச்சாரியான்கள் நாலாஞ்சாதி இந்நெறிகளில் வராதவர்களும், இவர்களையும் இவர்கள் சாத்திர முதலியவற்றையும் நிந்திப்பவர்களும், இந்நெறிகளிலே முறைபிறழ்ந்து

நடக்கின்றவர்களும், இந்த நடைகளை விட்ட பதிதர்களும், சதாசூதகிகளாகிய பஞ்சமசாதி.

சிவசரியை கிரியை முதலியவைகளிலே பொருள்தேடி உடம்பை வளர்ப்பவர்களும், அப்பொருளை பாசத்தாருக்குக் கொடுத்து

இன்புறுபவர்களும், கோயிலதிகாரிகளாய்த் தேவத்திரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப் பொருட்டு ஆசாரியாபிஷேக முதலியன செய்துடையோர்களும், விருத்திப் பொருட்டு சிவவேடந்தரித்தவர்களும், விருத்திப் பொருட்டுத் துறவறம் பூண்டவர்களும், சிவஞானநூல்களைச் சொல்லிப் பொருள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களும், பிறரும் பதிதர்களுள் அடங்குவர்கள்.

இங்கே சொல்லிய முறையன்றி, சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுத் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய குருலிங்கசங்கமமென்னும் மூன்றிடத்தும் ஆசையும் பணியும் வழிபாடும் கொடையும் அடிமைத் திறமும் உரிமையுடையவர்கள் எந்தக் கருமஞ்செய்தாலும் முதற்சாதியெனக் கொள்ளப்படுவார்கள்."

நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - யெல்லவரு
மேத்துபுராணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை - சி.வை.தாமோதரம்பிள்ளை

## ஸ்ரீகாசிவாசி சாம்பவஸ்ரீ செந்திநாத ஐயர் பெருமானார்
## (02.10.1848 - 05.05.1924)



யாழ்ப்பாணத்தில் குப்பிளான் கிராமத்தில், சின்னையா ஐயர், கௌரியம்மை தம்பதியருக்கும் மகனாகப் பிறந்த ஐயரவர்கள், அகோர சிவாச்சாரியார் என்னும் தீஷா நாமம் பெற்றவர். ஆறுமுகநாவலருடன்

நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரின் பணிகளைத் தொடர்ந்தவர். காசியில் பத்தாண்டுகள் தங்கி வடமொழி நூல்களை ஆய்ந்தவர் ஐயரவர்கள். இதனால் இவர் 'காசிவாசி செந்திநாதையர் என அழைக்கப்படுகிறார். காசி வாழ்க்கைக்குப்பின் தமிழகத்தில் வாழ்ந்த ஐயரவர்கள்., திருப்பரங்குன்றத்தில் 'வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த வித்தியாசாலை' என்ற பாடசாலையை நிறுவிப் பணி புரிந்தார்.

செந்திநாதையர் எழுதிய நூல்கள் பல. பழைய கட்டுரைகளிலிருந்து அவை நாற்பத்தியைந்தெனத் தெரியவருகின்றன. அவர் பிறந்த யாழ்ப்பாணத்துக் குப்பிளான் கிராமத்தில் உருவான செந்திநாதையர் ஞாபகார்த்த சபை 1978-ல் வெளியிட்ட 'காசிவாசி செந்திநாதையர்' என்ற மலரில் அவரின் இருபத்தொரு வெளியீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று பொதுவில் வேதாந்தம் என்று வழங்கப்படுவது பிரம்மசூத்திரத்திற்கு எழுந்த உரைகளினால் உருவான வைணவம் (துவைதம், விஷிட்டாத்வைதம்), ஸ்மார்த்தம் (சங்கரமட மாயாவாதம்) முதலியனவாகும். ஆனால், வேதாந்தம் என்பது வேதங்களின் சிரசான உபநிடதங்களையே குறிக்கும். அதுவே காரணப்பெயர். ஞானிகளின் மொழிகளாய் உள்ள பெயர். வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன் - சிவப்பிரகாசம்

உண்மை வேதாந்தமென்பது சைவநெறியே என்ற வாய்மையை உலகறியச் செய்ய, சைவ வேதாந்தம் என்ற நூலை உலகுக்கு அருளினார். ஞானபோதவிளக்கச்சூறாவளிஎன்னும்நூலைஎழுதி, சைவமறுமலர்ச்சிக்கு வித்தை இட்டார். வேதங்களிலுள்ள கருத்துக்களையும் தேவாரத்திலுள்ள கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து, அவற்றுக்கிடையில் உடன்பாடு கண்டு எழுதப்பட்ட நூல் 'தேவாரம் வேதசாரம்.

சிவஞானபோதத்தை எளிதில் விளக்கும் நோக்கில் செந்திநாதையர் எழுதிய உரைநூல் 'சிவஞானபோத வசனாலங்கார தீபம்'. 'சித்தாந்தப் படம்' என்ற ஒன்று வெளியிட்டு அன்று ஒரு புதுமுறை விளக்கம் அளித்தவர். பிரம்மசூத்திரத்துக்கு சிவபரத்துவமாய் எழுந்த, நீலகண்ட பாஷ்யத்துக்கு தமிழ்கூறு நல்லுலகத்தார் பயன்பெறமுடியாதிருந்தமை கண்டு, நீலகண்ட பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்புக்கு ஆராய்ச்சி முகவுரையாக இரு நீண்ட உபக்கிரக மணிகைகள் எழுதியுள்ளார். ஒன்று உபநிடத உபக்கிரக மணிகை. மற்றையது பிரம சூத்திர உபக்கிரக மணிகை. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு டாக்டர் பட்டம் வழங்கலாம் என பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவரகள் கூறியுள்ளார்.

கந்தபுராணப் பாற்கடலில் முழுகிய ஐயரவர்கள், அதில் வெண்ணெய் திரட்டி எடுத்தாற்போல், சைவ உலகு மகிழுமாறு வழங்கிய நூல், கந்தபுராண நவநீதம் ஆகும். "கந்தபுராணமாகிய பாற்சமுத்திரத்தில் திரண்ட- திரட்டிய வெண்ணெய்" என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் கந்தபுராண நவநீதத்தைக் கொண்டாடினார். கிருஸ்துமத கானன் குடாரி, சித்தாந்த சிகாமணி, சித்தாந்தபானு என்ற பட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவர் ஐயரவர்கள். "செந்திநாத சுவாமி யந்திரசாலை" என்னும் அச்சகத்தை நிறுவினார்.

அமிர்த போதினி என்ற வாரவெளியீட்டை நடத்தியவர். சிவனாந் தேவனா என்னும் தீய நாவுக்கு ஆப்பு, வஜ்ரடங்கம், ஞானரத்தினாவளி, வீரபத்திராஸ்திரம், விவிலிய குற்சித கண்டனதிக்காரம், வச்சிரதண்டம், தாந்திரிக துண்ட கண்டன கண்டனம் என்னும் நூல்களை வெளியிட்டவராவர்.

அறிவு வளர வளர-முதிர முதிர கிருஸ்தவ நெறி வெறும் புறநோய்- அன்னவிசாரம், ஏகாத்மவாதநெறி பொல்லாத உள்நோய் - ஆத்ம வருத்தம் என்பதைச் செந்திநாதையர் நன்கு உணர்ந்தார். தமிழ் நாட்டுக்கும் தாம் பிறந்த ஈழநாட்டுக்கும் அந்த மகான் அளப்பில்லாத சேவை செய்திருக்கின்றார். மாயாவாத மாருதத்தை ஆசமனஞ் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேஷனாகவே காட்சியளித்தார். தென்னிந்தியாவிலே நல்லுசாமிப்பிள்ளை அவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்திற் பெயர்த்தற்கும்,ஆண்டாளம்மையார் சைவசித்தாந்த மழை பொழிந்தற்கும் நமது ஐயர் உறுதுணையாயிருந்தார்....... இங்கே மாயாவாத துவம்ச கோளரி திரு.நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் கர்ச்சனைகளுக்கும், சுவாமிநாத பண்டிதரின் வீராவேசத்திற்கும், சிவஞானபோத திராவிட மாபாடிய வெளிப்பாட்டிற்கும் மகான் செந்திநாதையரே மூல புருஷர்."
- பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

எமக்குத் தெரிந்தமட்டில், இத்தமிழ்நாட்டில் இருமொழியிலும் வல்லுனராகி அதிலும் வேதாகம நூல்களிற் பயின்று நம்மாகமாந்தங்களையும் அதன் பூர்வோத்திரங்களையும் பூர்த்தியாயுணர்ந்து, அதிலும் அவ்வுண்மைகளை நம்மனோர் உணரும் பொருட்டு அநேக கணக்கான நூல்களையும், பத்திரிகைகளையும் பதிப்பித்து நம் சைவத்தை வளர்த்து வந்தவர்களில் நம் ஐயரவர்களைவிட இன்னும் பெரியாரைக் கண்டிலம். - திரு.ஜே.எம். நல்லுசாமிப்பிள்ளை (சைவத்தை ஆங்கில மொழித்திறனால் ஆங்கில மொழியில் பரப்பிய பெருமகனார் திரு.ஜே.எம்.நல்லுசாமிப்பிள்ளையாவார்.)

# மாயாவாத துவம்ச கோளரி
# ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை பெருமானார்
# (1860 – 1907)



பருத்தித்துறை, மேலைப் புலோலியில் வாழ்ந்த நாகப்பபிள்ளை, சிவகாமி அம்மையாரின் இல்லறப் பயனாக, பிரசோற்பதி ஆண்டு மார்கழி மதி குருவாரம் 3ஆம் தேதிக்குச் சமமான 1860ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிறந்த கதிரவேற்பிள்ளை, ஆறுமுக நாவலரின் மாணாக்கராகிய மகாவித்துவான் தியாகராசப்பிள்ளை என்பாரிடம் முறையாகக் கல்வி கற்றார்.

சைவசந்திரிகை, சைவசித்தாந்தச் சுருக்கம், சப்பிரமணிய பராக்கிரமம், சிவாலய மகோற்சவ விளக்கம், திருவருணைக் கலம்பகம் உரை, அதிவீரராம பாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்ம புராணத்திற்கு உரை, பழநித் தலபுராணம் உரை, தமிழ்ப் பேரகராதி (யாழ்ப்பாணத் தமிழகராதி), சைவசித்தாந்தச் சுருக்கம் என்பன மாயாவாததுவம்ச கோளரியார் எழுதிய நூல்களில் சிலவாகும். பழநித்தல புராண உரையும் கூர்மபுராண உரையும் பெருமகனாரின் சொல்வன்மைக்கும், உரைநயத்துக்கும் சான்றாகும். தமிழ்ப் பேரகராதி வித்தியாரத்நாகர அச்சியந்திரசாலையில் 1899இலும், நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையில் 1901இலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சிவநிசிப் புராணத்திற்குச் (சிவராத்திரிப் புராணம்) சிறந்த விருத்தியுரை எழுதினார். சிலேடைகள் பலவும், பாடல்கள் பலவும் எழுதினார். நைடதத்திற்கு உரையையும் இயற்றினார். கதிர்காமத்துக்கு ஒரு கலம்பக நூல் இயற்றினார்.

"பூவில் இடைகடை ஆதிஎழுத்தின் முன்பேருறப் பதித்த பத்தகங்கள்
யாவும் இடை கடை எனவே யாழ்ப்பாணப் புலோலி நகரினின்மா சீர்த்தி
பாவுபுதுச் சந்நிதியான் அருட்கதிரை வேற்புலவன் பதித்த மேன்மை
மேவும் அகராதியிதே முதலதெனற் கிதன்பெயரே விளக்கும் அன்றே"

- தஞ்சை சதாவதானம் பிரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள்

"பட்டினத்து அடிகளார் புராணத்தை முன் ஒருவர் முதல் நூல் சிந்தியாது மொழிந்தமையால், அப்புராணத்துள் முதல்நூற்கு முரணாகக் கூறும் பாக்களை நீக்கி முதல் நூல் தழுவிப் பல பாக்கள் பாடிச் சேர்த்து பதிப்பித்தனர். அதில் எம்பெருந்தகை இயற்றிய செய்யுள் நடை கச்சியப்ப முனிவர் செய்யுள் நடையைக் கடுக்கும்" - தமிழ்த் தென்றல் திரு.வி.க

வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீ சோமசுந்தர நாயக்கரின் வேண்டுகோட்படி, அத்துவித மாயாவாதக் கொள்கை சைவசமயத்தாருள் திணிக்கப்படுவதைத் தடுக்குமாறு, ஸ்மார்த்த சமயத்தாராகிய கேவல அத்வைதத்தை ஒழுகுவாரோடு, பெரியோர் கூடிய சபையிலே, சொற்போர் புரிந்து, வெற்றியீட்டினார். அப்பெருமையைப் பாராட்டி, ஸ்ரீகாசிவாசி சாம்பவஸ்ரீ செந்திநாத ஐயரவர்கள், மாயாவாத துவம்ச கோளரி என்று கதிரைவேற்பிள்ளைப் பெருமகனாருக்குப் பட்டமளித்தார். ஆரணி சமஸ்தான மன்னனின் வேண்டுகோட்படி, மாயாவாத ஸ்மார்த்தமத சங்கராச்சரிய மடத்துக் கொள்கைகளைப் போதித்துவந்த சாத்திரியாரொருவரோடு வாதம்செய்து, வென்றார். அதன்பொருட்டு, அந்த அரசரால் கதிரைவேற்பிள்ளைப் பெருமகனாருக்கு "அத்துவித சித்தாந்த மதோத்தாரணர்" என்னும் அரிய பட்டம் அணியப்பட்டது

அறிஞர் பலர்கூடிய அவையில் தொடர்ச்சியாக நடைபெற்ற வைணவர்களுடனான விவாதத்தில், கண்ணபிரான் திருநீறு தரித்த சிவபத்தர் என்று வேத, புராண, இதிகாச ஆதாரங்களையும் ஆழ்வார் பாசுரங்களையும் கொண்டு நிறுவி, வெற்றிகொண்டார். அதனை தமது சைவ பூடண சந்திரிகையில் எழுதியும் அரங்கேற்றினார். பழநித் தலத்திற் பரிவட்டம் தரிக்கப்பெற்றார். புத்தமத கண்டனம் என்னும் ஓர் புனித நூல் இயற்றி, சொற்பொழிவும் செய்து புத்தமதத்தில் தத்துவம் இன்மையை விளக்கினர். வடலூர் இராமலிங்கனார் பாடிய அருட்பாவை மருட்பாவென்று கண்டனஞ்செய்து, அதனால் எழுந்த வழக்கிலும் வெற்றிபெற்றார்.

பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடல் புராணத்தையும், கந்தன் அருளால் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிய கந்த புராணத்தையும் முறையே புதன், சனிக் கிழமைகளில் பிரசங்கித்து

வருவாராயினர். வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார்களால் வேண்டிக்கொண்டபடி, அறிஞர்கள் பலர் கூடிய சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில், அத்தியாச்சிரம பால சரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானாந்த சுவாமிகள் முன்னிலையில், சதாவதானம் செய்து, "சதாவதானி" என்று பட்டமும் பெற்றார். "யாழ்ப்பாணம் தந்த சிவஞான தீபம்" என்னும் மாயாவாத துவம்ச கோளரியார் பெருமானாரின் வரலாற்றை புகழும் நூலினை அவருடைய மாணாக்கராக விளங்கிய திரு.வி.கல்யாணசுந்தரனார் எழுதியுள்ளார். இந்நூலில் பெருமகனாரை அக்காலச் சைவ உலகம் எவ்வாறு கொண்டாடியதென்பதை நன்கு ஆவணப்படுத்தியுள்ளார்.

"பிள்ளையவர்களை யாழ்ப்பாணச் சிங்கம் என்றும், சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தியே நம் பந்தம் கழிக்க நாகப்பர் சுதராய் உற்றனர் என்றும், சோமசுந்தர நாயகர்க்குப்பின் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தைச் செழிப்போரில்லை என வாடிய எங்கள் உள்ளம் களி துளும்பச் "சோமனார் சென்றார் சூரியனார் தோன்றினார்" என்ற உலகம் உரைப்ப உதித்த கதிரைவேல் என்றும், சைவ சித்தாந்தக் கோட்டையைத் தகர்க்க வரும் புறச்சமயவீரர்களின் சிரங்களைக் கொய்யச் சைவ பூடண சந்திரிகை எனும் வாள் ஆயுதத்தை நமக்கு அளித்த நாயகர் என்றும் பலவாறு போற்றிய பண்டித ரத்னங்கள்" - தமிழ்த் தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார் (யாழ்ப்பாணம் தந்த சிவஞான தீபம்)

# சிவபூமிச் சைவத் தேசிகர்

## சைவப்பெரியார் மு. திருவிளங்கம் தேசிகர் பெருமானார்

## (1859 – 1922)



"பெருமதிப்புகுரியவர்களான திருவிளங்க தேசிகர் அவர்கள் சமய சாதகர்களின் வரிசையைச் சேர்ந்தவர்கள்" என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும் "ஆள்தான் நூல், நூல்தான் ஆள், என்ற நியமப்படி இவரில் விளங்கிய சைவத் தூய்மை விளக்கமே இவரின் உரை விளக்கப் பிரகாசம் எனல் தகும்" என்று பண்டிதர்.மு.கந்தையா அவர்களும் திருவிளங்க தேசிகரைப் போற்றுகின்றனர். இவர் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், கந்தரலங்காரம், திருப்புகழ்த் திரட்டு ஆகிய நூல்களுக்கு அரிய உரைகள் எழுதியுள்ளார். தெளிவும் எளிமையும் மிக்கவை இவரின் உரைகள். "இவரின் சிவப்பிரகாச உரைபோல் சிறந்த உரை இன்றுவரை வெளிவரவில்லை" என்று சைவ அறிஞர் கொண்டாடிவருகின்றனர்.

திருவிளங்க தேசிகனார், சிவயோகர் சுவாமிகளின் அருள்நோக்கம் பெற்று உரைசெய்தவர் என்று சிறப்பிக்கப்படுபவர். "அவன், சித்தியார், சித்தியாரென்று உணர்ந்துணர்ந்து சித்தியார் மயமாய்ப் போனான்" - சிவயோகர் சுவாமிகள் "சைவசித்தாந்த நூல்களிலே புதுமையும் ஆழ்ந்த கருத்துக்களும் கொண்ட நூல் உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவப்பிரகாசம். இந்நூலுக்கு உரை எழுதிய திருவிளங்கம், விளங்கமுடியாத நுண்பொருள் பலவற்றை விளக்கியுள்ளார்" என்று கலாநிதி, சைவசித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம் அவர்கள் புகழ்ந்துரைக்கின்றார்.

அருவிளங்கச் சிவநெறியின ருணந்தி
மொழிநூலினாழந் தேற்றி
உருவிளங்க உண்மைநிலை உணராதே
முணர்ந்தொழுக வொழுக்கிற் காட்டி
மருவிளங்கக் கதிர்காம வாழ்க்கைநிலை
கூட்டிவைத்த வரனே சைவத்
திருவிளங்கக் குருவேயுன் சேவடிகள்
சிரமனமேற் செறிப்போம் யாமே

- திரு.க.சி.நாதன் அவர்கள் (8- 9 - 1930)

## சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் பெருமானார்
(17-01-1878 - 14-08-1957)



சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் தவப்பயனாக 17-01-1878இல் பிறந்த பெருமகனார், சென்னை சர்வகலாசாலை பீ.ஏ பரீட்சையில் கணிதம், அளவையியல் ஆகிய பாடங்களில் திறமையுடன் சித்தியெய்தினார். ஆங்கிலம், வடமொழி, விஞ்ஞானம் ஆகியவற்றிலும் பரந்த அறிவோடு விளங்கினார். சேர் பொ.இராமநாதன் பெருமானார் ஆரம்பித்த பரமேசுவராக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரியின் அதிபராக பணியாற்றினார்.

சைவப்பெரியாரவர்கள் எழுதிய நூல்களில், சைவபோதம் முதலாம், இரண்டாம் புத்தகம், திருவருட்பயன் உரை, சைவ சமயம், சைவ சமயத்தின் பெருமை, சைவக் கிரியை விளக்கம், திருப்பெருவடிவம், கந்தபுராண உண்மை, திருவாசக மணிகள், திருக்குறள் மணிகள், அளவை நூல்,

அக நூல், படிப்பித்தலின் முறைகளும் விதிகளும், தருக்க நூல், தருக்க நூற்சாரம், The Saiva School of Hinduism, Glories of Shaivaism, Essentials of Logic, Arumugha Navalar, An Outlinline of Sivagnanabodham with a Rejoinder to a Christian Critic என்பவற்றோடு, சிவபெருமான் விரதம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், சந்தானாசாரியர் என்ற சிறுபிரசுரங்களும் சைவ உலகிற்கு கிடைத்த மாணிக்கங்களாகும்.

வயலெற் பரஞ்சோதி என்ற கிறித்தவப் பெண்மணி முனைவர் பட்டத்துக்காகச் செய்த ஆய்வு நூல் சைவ சித்தாந்தம் பற்றியது. அதில் பல தவறான, சித்தாந்தத்துக்கு முரணான, கருத்துக்கள் இருந்தன. இந்த ஆய்வு நூலுக்கு ஒரு மறுப்பெழுதி உண்மையை விளக்குவதற்குச் சாலப் பொருத்தமானவர் சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனாரே என்று தருமபுர ஆதீன குருமகாசந்நிதானமவர்கள் கருதி, திருவருட்கட்டளையை வழங்கியமையினால், சைவப்பெரியாரவர்கள் எழுதிய நூல் 'An Outlinline of Sivagnanabodham with a Rejoinder to a Christian Critic' என்பதாகும்.

சைவப்பெரியாரவர்கள் எழுதிய "கந்தபுராண உண்மை" என்ற நூல் புராண பாத்திரங்களும், தொடர்புடைய கதைகளும் உணர்த்தும் சித்தாந்தம் சார்ந்த உள்ளார்ந்த கருத்துக்களை வெளிக்கொணர்ந்து விளக்குகிறது. "சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் பீ.ஏ அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு எழுதி இந்து எம்மொழிச் சொல்? என்ன அர்த்தத்தில் உள்ளது என ஆராய்வித்து அது அந்நியச்சொல் ஆதலையும் அர்த்தமற்ற அமங்கலமான அதன் பொருள் இயல்பையும் தெரிந்துகொண்டு, 1956களில் யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து வாலிபர் சங்கத்திற்கு விளக்கிச் சைவ வாலிபர் சங்கம் என அதற்குப் பெயர் மாற்றம் செய்து வைத்தமை கண்கண்ட காட்சி." - பண்டிதர்.மு.கந்தையா பெருமானார். (சைவ ஞான விளக்கம்)

தர்க்க முறையிலும் தெளிவாகவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு நூல் 'The Saiva School of Hinduism'. இதனை இங்கிலாந்திலுள்ள 'George Allen and Unwin Ltd' என்னும் புகழ்பெற்ற பிரசுர நிறுவனம் 1934-ல் பதிப்பித்தது. சைவசமய, சைவசித்தாந்த அறிவை மேலைத்தேயத்தவர்கள் உணருமாறு எழுதப்பட்ட நூல் இதுவாகும். இப்பதிப்பகத்தார் சைவசமயத்தை இந்துமதமென்ற கூட்டுப்பெயரிலிருந்து பிரித்தறிய முடியாதவரென்பதால், இந்துமதத்தில் சைவசமயத்தை ஒரு தத்துவ வகுப்பாகவே புரிந்துகொண்டமையினால், அப்பதிப்பகத்தாரால் உருவாக்கப்பட்டதாகவே நூலின்பெயர் இருக்க வாய்ப்புண்டு.

"இவர் ஆங்கிலமொழியில் எழுதிய நூல் 'The Saiva School of Hinduism' என்பதற்கு நிகரான நூலொன்றை வேறொருவராலும் எழுத முடியவில்லை." - கலாநிதி சி.பத்மநாதன் (தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை,பேராதனைப் பல்கலைக்கழகம்)

"சாதரண பீ.ஏ பட்டதாரிகள் பட்டங்களால் மதிப்படைய, பீ.ஏ பட்டமே அவரால் மதிப்படைந்தது" - ஈழகேசரி (வெள்ளிவிழா மலர்)

"உடல், பொருள், ஆவி மூன்றையும் சைவ உலகத்திற்கே அர்ப்பணித்தவர். அவரின் ஒவ்வொரு மூச்சும் சைவ மூச்சாயிருந்தது. அவரின் இறுதி மூச்சு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணியாகும்"- ஈழகேசரி (வெள்ளிவிழா மலர்)

## சைவப்புலவர்
## காசிநாத அருணாசல தேசிகமணி பெருமானார்
(1888–1969)



சைவநெறிக் கொள்கையெலாந் தலைமயங்கி
நம்மவர்கள் தவறி வீழ்ந்து
தெய்வநெறி யிகழ்ந்துலகத் திறம்பெரிதா
மதித்தலைதல் தெரிந்தே யன்னர்
பொய்வளரு மனத்தினில்மெய்ப் பொருள்வளர
வொருபுதுமை புரிந்தான் மட்டூர்ச்
சைவமணி தமிழருணா சலமணிதே
சிகமணியாந் தகைமை யானே

- பண்டிதமணி, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

காசிநாத சாஸ்திரியார் - சின்னப்பிள்ளை அம்மையார் என்போரின் மகனாக, மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் தோன்றிய பெருமகனார். தேசிகமணியோடு, சைவ மெய்ப்போதகர், சைவசித்தாந்தமணி முதலான பட்டங்களாலும் பெருமகனார் அறியப்பட்டார். சைவக் களஞ்சியம் என்ற பெயரிலேயே இவர் தமது நூல்களைத் தொகுதிகளாய் வெளியிட்டார்.

சைவக் களஞ்சியம் பாகம் 1 - சைவசமய பாலர் போதினி
சைவக் களஞ்சியம் பாகம் 2 - சைவசமய இளைஞர் போதினி
சைவக் களஞ்சியம் பாகம் 3 - இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணிமாலை
சைவக் களஞ்சியம் பாகம் 4- இந்து சமய மாதங்களின் மகத்துவ மான்மியம்
சைவக் களஞ்சியம் பாகம் 5 - சைவ இலக்கிய கதா மஞ்சரி
சைவக் களஞ்சியம் பாகம் 6 - சைவசமய சிந்தாமணி
சைவக் களஞ்சியம் பாகம் 7 - சித்தாந்த சிரோன்மணி

(பகுதி 1 - அகிலாண்ட புவனா விளக்கம் அல்லது எங்கள் பூமி சாஸ்திரம், பகுதி 2- ஞானத் திறவுகோல் அல்லது அளவை இலக்கணம், பகுதி 3 - நாம் என்ன சமயம்? என்ன கொள்கை?)

மெய்ஞான தீபம், சர்வஞானோத்தராகம சாரசங்கிரகம், விநாயக மகத்துவ நுட்பமும் புளியநகர் ஸ்ரீ சித்திவிக்னேசுவர ஆலய மான்மியமும், முருகன் மகத்துவ நுட்பம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். இவர், தமது ஏழாம் பாகத் தொகுதி நூலில், மூன்றாம் பகுதியில் "நாம் என்ன சமயம்? என்ன கொள்கை?" என்னும் தலைப்பில் எழுதியுள்ளமைகொண்டு, இந்து என்னும் சொல்லை கலாச்சாரமென்ற அளவிலேயே அவரது ஆரம்பகால நூல்களில் கையாண்டார் என்பது புலனாகும்.

இராமகிருஷ்ண மடத்தில் சைவசித்தாந்தத்தை ஒழுகியவாறு திகழ்ந்த சுவாமி விபுலானந்தருடனும், வித்துவான் அ.சரவணமுத்தன் ஆகியோருடன் கூடிச் சைவசமயப் பணியாற்றினார். தேசிகர் மட்டக்களப்பின் அரசடி மெதடிஸ்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டார். ஆனால் இறுதிப் பரீட்சைக்குத் தோன்றுவதற்கும் சான்றிதழ் பெறுவதற்கும் மதம்மாற வேண்டும் எனும் வற்புறுத்தலுக்குப் பணியாது ஆசிரியர் பயிற்சியை இடைநிறுத்தின பெருந்தகையினர். ஆனைப்பந்திப் பாடசாலையில் பல்லாண்டுகள் தலைமையாசிரியராகப் பணியாற்றிச் சைவத்தமிழ் உலகுக்குத் தொண்டாற்றினார்.

மட்டக்களப்பின் புகழ்பெற்ற சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். தமது 15வது வயதிலிருந்து 65 ஆண்டுகளுக்கும் மேலாகவும் இவரது சொற்பொழிவுகள் நிகழப்பெற்றன. எடுக்கின்ற எந்தப் பொருளிலும் ஆழ்ந்து

பேசக் கூடிய திறமை கொண்டிருந்தார். பொதுமக்களை கவரக்கூடிய இனிய தமிழில் நகைச்சுவை ததும்ப உணர்ச்சியோடு பேசுபவர். ஒரு சைவ சமயி அகவாழ்விலும் புறவாழ்விலும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையே பொதுவாகத் தன் சொற்பொழிவுகளின் பொருளாகக் கொண்டார். மேலும், மட்டக்களப்பில் ஆகம வழிபாட்டு முறைக்கு விளக்கம் கொடுத்தும், கோயில் அமைப்பு, நித்திய நைமித்திய பூசை முறைகள், வழிபாட்டு முறைகள் முதலான பல்வேறு தலைப்புக்களிலும் பேசியுள்ளார். மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஆலயத்தில் வெள்ளிக் கிழமைகள் தோறும் தவறாது பிரசங்கம் செய்துவந்தார். தம்மைத் தொடர்ந்து பிரசங்கம் நிகழ்த்தவென மாணவர் பரம்பரை ஒன்றையும் உருவாக்கினார். சீ. நாகையா ஆசிரியர், வ. சித்திவிநாயகம் ஆசிரியர், பண்டிதர். த. கிருஷ்ணபிள்ளை போன்றோர் அவ்வாறு குறிப்பிடத்தக்கோராவர். பெருமகனாரின் பெருந்தொண்டு யாதாயின், மட்டக்களப்புத் தேசத்தில் மிஷனரிகளின் ஆதிக்ககாலச் சூழலுள், மிஷனரிகளுக்கு அஞ்சாது, சைவசமயத்தையும் சித்தாந்த ஒளியையும் ஏற்றிப் பிரகாசிக்க வைத்தமையென்றால் அது மிகையாகா.

## பண்டிதர் மு. கந்தையா பெருமானார்



ஏழாலையில் பிறந்தவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் (1917 - 2002). இதனால் அவர் ஏழாலை பண்டிதர் கந்தையா என்று பொதுவாக அழைக்கப்படுவதுண்டு. சித்தாந்தத் தெளிவும் மும்மொழிப் புலமையும் கொண்ட தமிழ்ப் பண்டிதரான கந்தையாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தது. இலண்டன் பல்கலைக்கழக சமஸ்கிருதக் கலைமாமணி சிறப்புப்பட்டமும் பெற்றவராவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலமென்று

மும்மொழித் தேர்ச்சியோடு விளங்கிய பெருமகனார். அதுகொண்டு உலகோருக்கு சைவநூல் உண்மைகளை உள்ளபடி உணர்த்தும் அருந்தொண்டை ஆற்றிவந்தார்.

தமிழ்மொழி அறிவு சைவசித்தாந்தத்தை தெளிவதற்கு அடிப்படையான வொன்றென்பது பண்டிதர் பெருமானாரின் நிலைப்பாடாகும். 'சைவசித்தாந்த சாஸ்திரங்கள் தமிழ் மொழியிலேயே வாய்த்துள்ளன. இவையனத்தையும் ஒரு கூட்டாக எண்ணுவார்க்கு, தமிழ்க் கலாசாரப் பின்னணியிலே சைவ சித்தாந்தக் கலை சோபிப்பது புலனாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், திருமுறைகள் முதலிய அனைத்து நூல்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிந்து கிடக்கும் நிலையும் சுவாரஸ்யமானதொன்று. ஆதலால் சைவசித்தாந்த விளக்கம் தமிழ்மொழி விளக்கத்தை இன்றியமையாதென்பது சொல்லாமலேயமையும். இதனால் உயர் தமிழ் இலக்கிய இலக்கண மரபு வழிப்பாடான தமிழ் அறிவுநிலை சைவசித்தாந்த விளக்கத்துக்கு ஒரு அடிப்படைத் தேவை என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.' - பண்டிதர் மு. கந்தையா பெருமானார் (சித்தாந்தச் செழும் புதையல்கள்)

பண்டிதரின் தமிழாளுமையையும் சித்தாந்த தெளிவின் சொற்பதங்கடந்த மேன்மையையும் சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம் அவர்களுடைய எழுத்துக்களினூடாகத் தெளியலாம். சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம் அவர்கள் பண்டிதரைப் பற்றி பின்வருமாறு எழுதுகின்றார்.

"இவ்வாறு எழுதும் இம்மேதையின் உயர் தமிழ்ப் புலமை சித்தாந்த விளக்கங்களில் காணும் மயக்கங்களையும் முரண்பாடுகளையும் களைந்தன. உண்மைவிளக்கம் எனும் சித்தாந்த நூலின் ஒரு பாடல் முத்தியில் பேரின்பத்தை அனுபவிப்பது ஆன்மா, அந்த இன்பத்தைக் கொடுப்பவன் இறைவன் என்று கூறுகிறது. இது எல்லோருக்கும் ஒத்த கருத்தே. ஆனால், இக்கருத்தைத் தொடர்ந்து 'இத்தை விளைவித்தல் மலம்' (இதனை விளைவிப்பது ஆணவமலம்) என்று கூறுகிறது. இது விளங்க முடியாததாக, மயக்கம் தருவதாக உள்ளது. ஆணவத்திலிருந்து விடுபட்ட நிலையே முத்தி நிலை. இந்த நிலையில் ஆணவம் எப்படி ஆன்மாவுக்கு இன்பத்தை விளைவிக்கும்? விளங்க முடியாத இத்தொடருக்கு அறிஞர்கள் வெவ்வேறு விளக்கங்கள் அளித்துள்ளனர். 'முத்தியில் ஆணவம் திருந்திய நிலையிலுள்ளது', 'முத்தியிலும் ஆணவம் உண்டு. ஆனால் செயற்படுவதில்லை' போன்ற விளக்கங்கள் தரப்பட்டன. இவை சரியான விளக்கங்களாக அமையவில்லை என்பதைப் பண்டிதர் உணர்ந்தார்.

ஆகமக் கருத்துக்களைக் கொண்டவை சித்தாந்த நூல்கள் என்றாலும், அவை தமிழ்ச்செய்யுள் நூல்களே. தமிழிலுள்ள சாத்திர நூல்களுக்குப் பொருள் காண்கையில் செய்யுள் உத்தி முறைகளைத் தழுவியே பொருள் காணவேண்டும். இது நூலாசிரியர்களின் உள்ளக்கிடக்கை என்பது பண்டிதரின் கருத்து. சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கண நுட்பங்களிலும் தர்க்க விதிகளிலும் பயிற்சியின்றி சித்தாந்தச் செய்யுட்களை விளங்குதல் இயலாதென்பதும் அவரின் கருத்து. எனவே 'இத்தை விளைவித்தல் மலம்' என்ற தொடருக்கு விளக்கம் காண தமிழ்க் கவிதை உத்திகளை உதாரணத்துக்கு எடுக்கிறார்.

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை', என்பது திருக்குறள். 'கெடுப்பதூஉம்' என்ற சொல்லுக்கு பரிமேலழகர் 'பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும்' என்று உரை காண்கிறார். இதனை எடுத்துக் கொண்டு பண்டிதர் குறிப்பிட்ட பாடலை விளக்குகிறார். 'பெய்யாமை' என்ற எதிர்மறை கெடுதலுக்குக் காரணமாயிருப்பதால் 'மழை' காரணமென்று கூறப்படுகிறது. இதுபோல் மறையாமை என்ற எதிர்மறை இன்ப விளைவுக்குக் காரணமாயிருப்பதால் 'மலம்' காரணமென்று கூறப்படுகிறது. ஆகவே 'இத்தை விளைவித்தல் மலம்' என்ற தொடரில் 'மலம்' என்பது 'ஆணவமலம் உயிரை மறையாமை'என்றே பொருள் கொள்ள வேண்டும். இது போன்ற பண்டிதரின் விளக்கங்கள் சித்தாந்த வளரச்சிக்கு ஆக்கமளித்தன."

இந்து சமயம் என்பது இந்திய சமயங்கள் பலவற்றைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர். அது ஒரு தனிச்சமயம் அல்ல. இந்து சமயம் என்ற பெயரால் உடன்பாடற்ற தத்துவ விளக்கங்களும் வழிபாடுகளும் சைவத்துள் புகுந்துள்ளன. சங்கரரின் அத்வைத வேதாந்தம் இவற்றில் ஒன்று. இதன் தாக்கத்தால், சைவசமயக் குருமார்கள், இந்து குருமார்களென்றும், சைவசமயத்தார் தம்மை இந்துமதத்தாரென்றும் கற்பிழந்து நிற்கும் நிலைகண்டு வருந்தி, சைவசமயத்தினுள் ஊடுருவி வருகின்ற ஸ்மார்த்த மதமான காஞ்சி சங்கராச்சாரிய மடக்கொள்கைகளை வெளிப்படுத்தி, சைவசமயத்தாரை சமயக்கற்போடு வாழச்செய்வதற்கு, ஸ்மார்த்த சண்மதக் கொள்கைகளுக்கு எதிரான கோளரியாக விளங்கிய பெருமகனார். அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தார், சைவசித்தாந்தத்துக்கு உள்ளது உள்ளபடி பொருள்கொள்ளமுடியாது பிறழ்ந்துநின்றபோது, சைவ சித்தாந்தத்தில் மாயை உண்மை என்ற நூலினூடாக, அவ்வாதீனத்தாரின் நிலைப்பாட்டைத் தவறென்று சைவ உலகம் தெளியுமாறு வழிகாட்டினார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் தொடங்கிய பெரியபுராண சூசனம் என்னும் நூல், இருபத்தி மூன்று நாயன்மார்களோடு விடுபட்டு நிற்க,

அந்நூலைப் பூரணப்படுத்தும் பெரும்பணியை சிரமேற்கொண்டு,ஏனைய நாயன்மார்களுக்கும் சூசனம் எழுதி, முழுமைப்படுத்தியவர் பண்டிதர் பெருமானார். சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள், சிவஞானசித்தித் திறவுகோல் , சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி என்பவை சைவசித்தாந்த அறிவுக்கும் ஆய்வுக்கும் துணைசெய்வன. சைவத்தைச் சிதையாமற் காப்பதற்காக 'சைவத்தமிழ் அறிவியற் பண்பாட்டியக்கம்' என்ற பெயரில் பிரசுரங்களையும் பண்டிதர் பெருமானார் வெளியிட்டார்.

இந்துமதமென்ற பெயரில், ஸ்மார்த்த மதத்தாராகிய காஞ்சி சங்கரமடத்தாரின் கொள்கைகள் சைவசமயத்துள் பேரலையாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில், சைவசமயத்தார் சைவசமயத்தை கற்போடு ஒழுகி சைவசமயத்தை பேணிடுவதற்கு, ஸ்மார்த்தக் கொள்கையினருக்குப் பேரிடியாகத் திகழ்ந்து, சைவசமய உண்மைகளைக் காத்திடும் பேரரணாக விளங்கிய பெருமகனார் பண்டிதர் மு.கந்தையா அவர்களாவர்.

# சிவபூமிச் சைவத் தாதையர்

## கோமான். பொன். இராமநாதன் பெருமானார்

(ஏப்ரல் 16, 1851 – நவம்பர் 26, 1930)



இராமநாதன் கல்லூரி (பெண்கள் பாடசாலை), பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் சைவப்பெண்கள் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றைக் கட்டுவித்த கோமான். கீழைத்தேய மெய்யியல் தூதுவராக 1905 - 1906

இலே அமெரிக்காசென்று சொற்பொழிவுகளாற்றிப் பெயர் பெற்றார். சைவசித்தாந்த மகாசமாஜத்தின் முதல் மாநாட்டிற்குத் (1906) தலைமை வகித்தார். பகவத் கீதா என்னும் மொழிபெயர்ப்பு நூலூடாக,பகவத் கீதைக்குச் சைவசித்தாந்த விளக்கவுரை கண்டவர் என்று 1981ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அவரது பகவத்கீதை மொழிபெயர்ப்பு சிறப்பிக்கப்பட்டது.தனது தந்தை கொழும்பு கொச்சிக்கடையிற் கட்டி 1857 நவம்பரிலே குடமுழுக்கு செய்வித்த. கோயிலை, தமிழகக் கோயில்கள் போன்று கருங்கற் கோயிலாகக் கட்டுவித்தார்.

1906இல் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருந்த சேர். பொன்.இராமநாதனை கப்பலில் சந்தித்த அமெரிக்கர் ஒருவர் "ஐயா நீங்கள் இந்துவா?" எனக் கேட்டபோது சிரித்துவிட்டு நாங்கள் சிவபெருமானை வழிபடுபவர்கள். அக்கருத்தில் நாங்கள் சைவர்கள்.விபரம் அறியாத வெளிநாட்டவர்கள் எங்களை இந்துக்கள் என்கிறார்கள் அதற்காக நாங்கள் அப்பெயருக்கு உரியவர் ஆகமாட்டோம்" என்றார். திருமதி லீலாவதி இராமநாதன் எழுதிய "Eastern pictures to Western Students" எனும் நூலில் இன்றும் காணக்கிடைக்கும் செய்தியிது. அன்று விபரம் அறியாதவர்களாக சேர்.பொன்.இராமநாதன் சுட்டுவது வெளிநாட்டவர்களை! இன்று விபரம் அறியாதவர்கள் என்றால் நாங்கள் தானே? வெளிநாட்டவரா என்ன?

"சிறுவர் சிறுமியர்க்குக் கல்வியிரு கூடம்
நிறுவினான் பேர் என்றும் நிற்கும் - பெறும்பெயரார்
சென்னைக்குப் பச்சையப்பன் சீர்யாழ்ப்பா ணத்துக்கு
மன்னும் இராம நாதன்"

என்று பச்சையப்பன் கல்லூரியோடு இராமநாதன் பெருந்தகையை ஒப்பிட்டார் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரையாளர் பிரான்சிஸ் கிங்ஸ்பரி என்ற அறிஞர்.

# சைவப்பெரியார் கா. சூரன் பெருமானார்
(1881 – 1956)



இலங்கையின் வடக்கே வடமராட்சியில் அமைந்துள்ள தேவரையாளி சைவ வித்தியாசாலையின் நிறுவனராகவும் முதல்வராகவும் இருந்தவர். இவர் ஒரு சமூக முன்னோடியுமாவார். பதிகங்கள் பாடுவதிலும் கவியாற்றுவதிலும் வல்லவர்.

இப்பெருமகனார், கரவெட்டியில் தந்தையார் வே. காத்தார், தாயார் வள்ளி ஆகியோருக்கு மூத்த புதல்வனாகப் பிறந்தார். இவர் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர். சாதித்துவம் வலுத்திருந்த காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்கள் கற்பதற்குத் தடைகள் உருவாக்கப்பட்டபோது, அதனைக் கிருஷ்தவமிஷனரிகள் மதமாற்றத்துக்கு உந்துசக்தியாகப் பயன்படுத்துவதைக் கண்டு, தமிழ்ச்சமூகத்தின் நிலை கண்டு வருந்தி, தாமே அனைவருக்குமாய்க் கல்வி வழங்க வேண்டுமென்றெண்ணி, தேவரையாளி சைவவித்தியாசாலையை நிறுவினார். இது இன்று, தேவரையாளி இந்துக்கல்லூரியாக விளங்குகின்றது. சைவசமயத்தில் சாதியென்பது காலவழுவால் வந்தென்று வலியுறுத்தி, சிவாச்சிரமமே சைவநெறிக்குரியதென்பதில் உறுதியாக நின்றார் சைவப்பெரியார் கா. சூரன் பெருமானார்.

1923 ஆம் ஆண்டு வதிரியில் அண்ணமார் கோவிலில் ஆடு பலியிடுதல் வழக்கிலிருந்தது. சைவப்பெரியார் சூரன் பலிபீடத்தில் தன் தலையை வைத்து ஆட்டை வெட்டுவதற்க்கு முன்னர் தன் தலையை வெட்டுங்கள் எனக் குரல் கொடுத்து அந்த ஊரில் பலியிடுதலை நிறுத்திவைத்தார். சைவப்பெரியார் சூரன் சிலை தேவரையாளி இந்துக்கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

# விருது பெறுநர் விபரம்

## 1. சைவநெறிக் காவலர் : திரு. சின்னத்துரை தனபாலா



பூர்வீகம் : யாழ்ப்பாணம்
பிறப்பிடம் : கொழும்பு
பெற்றோர் : திரு.சின்னத்துரை
திருமதி சௌபாக்கியம் தம்பதியர்
பிறந்த நாள்: 30 -08 -1951

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும், உயர் கல்வியை பம்பலப்பிட்டி, இரத்மலானை இந்துக் கல்லூரிகளிலும் கற்றவர்.

சைவசமயத்தாருக்குரிய கொடியான இடபக்கொடி பெரிதும் புழக்கத்தில் இல்லாதிருந்த குறையைக் கண்டுவருந்தி, விடைக்கொடியை உருவாக்கி, முதன்முதலில் கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானையில் 1998ஆம் ஆண்டு ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமது சொந்தச் செலவில் விடைக்கொடிகளை அச்சிட்டு, விநியோகிக்கத் தொடங்கினார். கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், உலக சைவப் பேரவை என்பவை தமது பேராதரவை விடைக்கொடிக்கு வழுங்கத்தொடங்கினர். அதன்பயனாக உலகளாவியரீதியில் விடைக்கொடி பட்டொளி வீசிப் பறக்கத்தொடங்கியது.

திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம்,பேரூர் ஆதீனம்,மதுரை ஆதீனம்,குன்றக்குடி ஆதீனம், நல்லை ஆதீனம், சைவநெறிக் காவலர் உருவாக்கிய நந்திக்கொடியை அங்கீகரித்து தமது திருவருட்சம்மதத்தை வழங்கினர்.

இலங்கை இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், விடைக்கொடி அச்சிடும்பொறுப்பை ஏற்று, இலங்கை முழுவதும் பரவுவதற்கு சைவநெறிக் காவலருக்கு உறுதுணை புரியலாயிற்று.

சைவநெறிக் காவலரின் பணிகளை மெச்சி, பேரூர் ஆதீனம் "விடைக்கொடிச் செல்வர்" என்னும் பட்டமளித்து ஆசீர்வதித்தனர். சிவநெறிப் புரவலர், சிவநெறிச் செல்வர், விடைக்கொடி வேந்தன், சிவப்பணி வித்தகர், நந்திக்கொடி போற்றும் வேந்தன்,கௌரவ கலாநிதி,சைவநெறிச் செம்மல், தேசமானிய பிரேமி போன்ற விருதுகளால் ஏற்கனவே சிறப்புச்செய்யப்பட்ட பெருமகனாராவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவராகவும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத்தலைவராகவும் தற்போது விளங்கிவருவதுடன், பல்வேறு சைவ அமைப்புக்களில் முன்னாள் தலைவராகவும் திகழ்ந்த சிறப்புக்குரியவர்.

இலங்கை சைவநெறிக் கழகத்தாராகிய நாம், எமது அமைப்பினது காப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்ற வேண்டுமென வினவியபோது, தயங்காது ஒப்புக்கொண்டு இலங்கை சைவநெறிக் கழகத்தின் ஆக்கப்பணிகளுக்கு ஊக்கமாக இருந்துவரும் பெருந்தகை.

**விருதுக்குரிய காரணிகள்:**

ஸ்மார்த்த மதக் கொள்கைகளை உடையார் பல்வேறு கொடிகளை, இலங்கையில் இந்துப் பண்பாட்டுக்கொடியாக திணிக்க முயன்றபோது அவர்களின் சூழ்ச்சிகள் வீழுமாறு, சைவப்பணியாற்றிய செம்மல்.

இலங்கை சைவசமய இந்துப் பண்பாட்டுக் கொடி விடைக்கொடியே என்று இலங்கைச் சைவர் உணர்வுபெறுமாறு பணியாற்றி வருகின்ற சிறப்பு.

இலங்கைச் சைவப் பண்பாட்டின் காவலராக, விடைக்கொடி காத்துநிற்கும் அருமை.

## 2. சைவநெறிச் செல்வர் : திருவாசகம் திரு.தம்பு துரைராஜா



பிறந்த இடம் : பொன்னாலை,சுழிபுரம்

பிறந்த நாள் : 16.09.1924

பெற்றோர் : திரு.தம்பு
திருமதி ஆச்சிமுத்து தம்பதியர்

கற்ற பாடசாலைகள்: கொழும்புத்துறை அரசினர் ஆண் பெண் கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம் ஸ்டான்லி கல்லூரி

37 ஆண்டுகள் அரச பணியாற்றி, 1981ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

திருவாசகம் தவத்திரு சபாரத்தினம் சுவாமிகளின் அத்தியந்த சீடர்.

திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள் மடத்தின் செயலாளராக 1988இல் பொறுப்பேற்று, சமயப்பணிகள் ஆற்றத்தொடங்கினார்.

வெளியிட்ட நூல்கள் : மனித வாழ்வின் மகத்துவம், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், ஈழத்து சிவாலயங்கள்.

திருமதி வசந்தா வைத்தியநாதன் அம்மையாரைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு, இலங்கையிலுள்ள சிவாலயங்கள் 88ஐ "ஈழத்து சிவாலயங்கள் "நூலாகத் தொகுத்து வெளியிட்டவர். திருவாசகத் தேனுக்கு அடிமையாகி, தமது இல்லத்திற்குத் திருவாசகம் என்றே பெயரும் சூட்டியவர். கலாபூஷணம் விருது பெற்ற பெரியவர்.

விருதுக்குரிய காரணிகள் : முதுமைத் தளர்ச்சிபாராது சபாரத்தினசுவாமி மடத்திற்காய்த் தொண்டாற்றிவருவதோடு, திருவாசகச் சிறப்பை தமிழர் உணர்வதற்கு ஏற்ப, தமது வாழ்க்கைமுறையை அமைத்துக்கொண்ட சைவப் பெரியார்.

## 3. சைவமாமணி : திரு.சி.க.பொன்னம்பலம்

பெற்றார் : திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை,
திருமதி சீனித்தம்பி பொன்னம்மா

பிறந்த இடம் : ஆரையம்பதி, மட்டக்களப்பு

பிறந்த திகதி : 18.03.1936

அரச முகாமைத்துவ சேவை தரம் ஒன்றைச் சார்ந்து 32 ஆண்டுகள் பணியாற்றியவர். ஆசிரியராகவும் திகழ்ந்தார். பிரதேச சபை விசேட ஆணையாளராக 9 ஆண்டுகள் பணியாற்றினார்.



கலாபூஷணம், கவிமணி, தமிழ்வாணர், புலவர், இலக்கிய வித்தகர், சமாதான நீதவான் சிறப்புக்களை உடையவர்.

திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணக் கதைச் சுருக்கம்,திருமுருக புராணம், மாமாங்கேஸ்வர் பதிகம், பிள்ளையார் பெருங்கதை முதலிய இருபத்தைந்து நூல்களுக்கும் அதிகமான நூல்களை எழுதிய சிறப்புடையவர்.

விருதுக்குரிய காரணிகள் : மட்டக்களப்பில் சைவசமய உண்மைகளை நூல்களாலும்,சொற்பொழிவுகளாலும் மக்களிடம் கொண்டுசெல்லும் மூதறிஞர்.

## 4. சைவசமூகச் செம்மல் : திரு.நடராஜா மன்மதராஜன்



பெற்றோர் : திரு. சுப்பிரமணியம் நடராஜா
திருமதி கதிரேசு செல்வரட்ணம்
தம்பதியர்

பிறந்த நாள் : 19.05.1950

பிறந்த இடம் : வட்டுக்கோட்டை

கல்வி கற்ற பாடசாலைகள் : பலாங்கொடை கொன்வன்ட், பலாங்கொடை சகீராக் கல்லூரி, இந்துக் கல்லூரி-இரத்மலானை, இரத்னபுர குருத்தலாவ புனித தோமஸ் கல்லூரி.

பலாங்கொடை தமிழ் மகாவித்தியாலயம்,கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, தெகிவளைத் தமிழ் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றி, கல்வி நிர்வாக சேவைத் தேர்வில் சித்திபெற்று, 1989ஆம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரி-இரத்மலானை(இடம்பெயர்வு)யின் அதிபராகப் பொறுப்பேற்றார்.

கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானையின் கட்டிடம் அடங்கிய காணி, இராணுவ முகாமாக விளங்கியமை கண்டு வருந்தி, இந்து வித்தியா விருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றத்தாரோடு இணைந்து, கல்லூரிக் காணியையும் கட்டிடத்தையும் மீட்கப்பணியாற்றி, வெற்றி கண்டார்.

கல்லூரியில் நவீனதரத்திலான இரசாயன ஆய்வுகூடம், கணிணிக்கூடம் என்பன உருவாகுவதற்கு அரும்பணிகள் ஆற்றினார். கல்லூரிக் காணியினை மாற்றார் அபகரிக்க ஏற்படுத்திய சதிகளை, நல்லசக்திகளை நாடி, முறியடித்தார். போர்க்காலத்தில் புத்தர்சிலைகளைக் கொண்டுவந்து கல்லூரிக் காணியினுள் இனந்தெரியாதோர் வைத்துவிட்டுச் சென்றபோது, அச்சிலையைப் பொறுப்பெடுத்துச் சென்று, இராணுவத்தார் வழிபடுவதற்கு இராணுவமுகாமில் இருப்பதுவே சாலச்சிறப்பென்று கூறி,அவர்களிடம் கையளித்தார்.

இறுதியுத்தத்தின்போது கைதுசெய்யப்பட்ட மாணவர் புனர்வாழ் வளிக்கப்பட்ட போது, தமிழ் கல்லூரிகள் பலவும் அம்மாணவர்க்கு கல்விவழங்க முன்வராதமைகண்டு, அம்மாணவர்க்குரிய புனர்வாழ்வுக்

கல்வி வழங்குவதற்கு கொழும்பு இந்துக் கல்லூரி இரத்மலானையைப் பயன்படுத்த அரசுக்கு சம்மதம் தெரிவித்து, அம்மாணவர்களுக்கு கல்வி ஒளியை ஏற்றிவைத்தார்.

பொருளாதாரத்தில் நலிந்த மலையக மாணவர் சிலருக்கு இந்திய பல்கலைக்கழகங்களின் புலமைப்பரிசில்கள் பெறுவதற்குக் காரணமாகி, அவர்களுடைய கல்வி ஒளியை பிரகாசிக்கச்செய்தார். பொறியிலளாளராகப் பலர் மொரட்டுவப் பல்கலைக்கழகத்திற்கும் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் செல்வதற்கு வழிசமைத்தார். இதில், பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவரும் அடக்கம் என்பது அவருடைய சமூகநலன்சார்ந்த சீரியதிட்டங்களின் பலனாகும்.

2009ம் ஆண்டு பணியிலிருந்து ஒய்வுபெற்றபின்னரும், இரண்டு ஆண்டுகள் கல்லூரிக்கு முதல்வராக மேலதிக பணி நீடிப்பில் பணியாற்றினார்.

### விருதுக்குரிய காரணிகள்:

இந்துசதுக்கத் தமிழர் சொத்தை மீட்டெடுக்க, இந்து வித்தியாவிருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றத்தாருக்குத் துணைநின்று, உதவியமை.

கல்லூரிக் காணி மாற்றாரால் அபகரீக்கத்திட்டமிடப்பட்ட சமயம், அக்காணியில் விநயாகர் ஆலயம் அமைத்து, கல்லூரிக் காணியைத் தமிழரோடு பந்தப்படுத்தியதோடு, அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் பொருளாதாரத்தினால் நலிந்த தமிழ்ச்சமூக மாணவர் கல்விகற்பதற்கு விடுதி அமைத்திடக், காணியை சட்டமுறைபடி ஒதுக்கி, தமிழ்சொத்தாகவே காணி நிலைபெற்றிட ஆவன செய்தவர்.

## 5. மருத்துவமாமணி : Dr. சேனாதிராசா ஆனந்தராசா

(பொது மருத்துவ நிபுணர்)



பூர்வீகம் : தெல்லிப்பழை

பெற்றோர் : திரு.நாகலிங்கம் சேனாதிராசா, திருமதி.இரத்தினம் தம்பதியர்.

பிறந்த நாள் : 25-10-1949

ஆரம்பக் கல்வியை உவெஸ்லிக் கல்லூரியில் கற்று, 1968-1973 காலப்பகுதிவரை தமது மருத்துவக் கல்வியை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்று, பயிற்சி மருத்துவராக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணியாற்றினார். அதன் பின்னர், மருத்துவராகக் கேகாலையில் பணியாற்றினார். பொதுமருத்துவ நிபுணராகத் தேர்ச்சி பெற்று, வவுனியா (1982 - 1985) ,பருத்தித்துறை (1985 - 1987), யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை (1987 - 1999), இலங்கைத் தேசிய வைத்தியசாலை (1999- 2009) ஆகிய அரச வைத்தியசாலைகளில் பணியாற்றிய கோமகனாவார்.

DCH, MRCP, FRCP ஆகிய கல்வித்தகைமைகளை உடைய மருத்துவ மாமணியவர்களுக்கு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தார் கௌரவ PHD பட்டமளித்துச் சிறப்புச் செய்துள்ளனர்.

**விருதுக்குரிய காரணிகள்:**

தமிழர்களின் மருத்துவப் புலமைச் சொத்து. மருத்துவ நிபுணர் பலருக்கு மருத்துவ ஆசானாக விளங்கிய அருமை.

நோயாளிகளோடு பலநிமிடங்கள் செலவழித்து. நோய்குறித்த விளக்கங்களை ஏற்படுத்தி. இனிமையாக நோயாளிகளோடு கதைப்பவரென்று தமிழ்ச்சமூகத்தால் கொண்டாடப்படும் சிறப்புடையவர்.

## 6. ஆசிரியமாமணி : திருமதி சசிமா இரவிக்குமார்



பூர்வீகம்/பிறந்த இடம் : வட்டுக்கோட்டை

பிறந்த நாள் : 07.10.1959

பெற்றோர் : திரு.வ.பாலசுப்பிரமணியம்
திருமதி.பிரகாசவதி தம்பதியர்

யாழ/வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை, யாழ்/வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்று, 1985.04.16 அன்று விஞ்ஞான ஆசிரியப் பணிக்குரிய நியமனத்தைப் பெற்று, கேகாலை உந்துகொட தமிழ் மகாவித்தியாலயம், கேகாலை புளத்கொகுபிற்றிய தமிழ் மகாவித்தியாலயம், தெகிவளை தமிழ் மகாவித்தியாலயம், கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானை ஆகிய பாடசாலைகளில் பணியாற்றிய சிறப்புடையவராவார். முப்பதாண்டுகால அரச ஆசிரியப் பணியின் பின்னர், 2015.09.01ம் திகதி அரச ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறிய போதும், சமூகப் பணியாக ஆசிரியப் பணியை தொடர்ந்து ஆற்றிவரும் சிறப்புடையவர்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சக்தி இல்ல மாணவர்க்கு 2006 ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டுவரை தொடர்ந்து கல்விப்பணியை ஆற்றிவந்த ஆசிரியமாமணியவர்கள், மதுகம முதலிய தென்மேற்குப் பிரதேசத் தமிழ் மாணாக்கரின் கல்வி ஒளியாகவும் திகழ்ந்துள்ளார்.

**விருதுக்குரிய காரணிகள்:**

வகுப்பாசிரியராகப் பணியாற்றி, மாணவர் பலரைச் செதுக்கியுள்ளார்.

பொருளாதாரத்தில் நலிந்த மாணாக்கருக்கு பாடசாலைக் கல்வியைத் தாண்டி, கல்விப்பணியை சமூகப்பணியாக ஆற்றிவருகின்ற சிறப்பு.

அகில இலங்கை இந்து மாமன்றத்தினரின் சக்தி இல்ல மாணவர்க்கு விஞ்ஞானக் கல்வியை ஊட்டிவிடும் அரும்பணி.

# சைவநெறிப் புரவலர் கலாநிதி மு.கதிர்காமநாதன் விருதுகள் பெறுவோர் விபரம்

## 1. குமரப்பெருமாள் சிறீபஞ்சாட்சரம்



- கிழக்கிலங்கை தம்பிலுவில் கிராமத்தை சேர்ந்தவர்.
- கிழக்கிலங்கையின் முக்கியமான இலக்கிய ஆளுமைகளுள் ஒருவராகச் சொல்லத்தக்க மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் குஞ்சித்தம்பியின் கூடப்பிறந்த அண்ணன் குமரப்பெருமாளின் மைந்தர்.
- ஆரம்பக்கல்வியை தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் கற்றார். அக்கரைப்பற்று தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் நீண்ட நாட்கள் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றினார்.
- 1978இலிருந்து இன்று வரை, உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் பொதுச்செயலாளராக பணியாற்றி வருகிறார்.
- தம்பிலுவில் சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையில் 9 ஆண்டுகளாக ஆலோசகராக விளங்குகின்றார்.
- இவரது இறைபணியைப் பாராட்டி, மட்டக்களப்பு திருப்பழுகாமம் சிவலிங்கேஸ்வரர் திருப்பணி மன்றம், 2015இல் "திருப்பணிச செம்மல்" எனும் பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்துள்ளது.

### விருதுக்கான காரணிகள்:

- கீழைக்கரையின் தென் அந்ததில் பெரும்பான்மைச் சமூகத்தினர் உரிமைகோரும் பகுதியில் இருக்கும் திருத்தலம் உகந்தை. கதிர்காமம் போலவே சைவர்களின் கையிலிருந்து பறிபோக இருந்த உகந்தையை மீட்பதற்காக சிவாகம விதிப்படி ஆலயத்தை மாற்றி, குடமுழுக்கு நிகழ்த்திய முன்னோடிகளில் ஒருவர் இவர்.
- கந்தசஷ்டி, கந்தபுராண படனம், சூரன் போர் முதலியவற்றை பல எதிர்ப்புகளின் மத்தியில் உகந்தையில் ஆரம்பித்து, இன்று வரை வெற்றிகரமாக நடத்தி வருபவர்.
- அக்கரைப்பற்று முதல் உகந்தை வரை அமைந்துள்ள ஆலயங்களில், திருவெம்பாவைக் காலத்தில் பலரை ஒருங்கிணைத்து திருவாசக முற்றோதலை நிகழ்த்தி வருபவர்.

இத்தகைய பெருமைவாய்ந்த சைவப்பெரியாருக்கு, "சைவநெறிப் புரவலர் கலாநிதி மு.கதிர்காமநாதன் விருது" வழங்குவதில் எமது இலங்கை சைவநெறிக் கழகம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

## 2. திரு.பொன்னையா சுப்ரமணியம்



- தெனியாயா பிரதேசத்தைச் சார்ந்த இளைஞர்.
- ஆரம்பக்கல்வியை தெனியாய மறை/மத்தேயு இருமொழி மகா வித்தியாலயத்திலும், பது/கொஸ்லாந்தை ஸ்ரீகணேஷா மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்று, ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருப்பதோடு, சைவசமூக மறுமலர்ச்சியை தெனியாயவில் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில், பிறசமயத்தார் மேற்கொள்ளும் மதமாற்றச் செயற்பாடு களிலிருந்து சைவசமயத்தாரைக் காத்திடும் நோக்கில், தெனியாய சைவ முன்னேற்றக் கழகத்தை சைவசமயப் பற்றாளர் பலரோடு இணைந்து உருவாக்குவதில் பங்களிப்புச் செய்து, அதன் பொதுச் செயலாளராகத் தற்போது பணியாற்றிவருகின்றார்.
- சமூகஜோதி, சமாதானநீதவான், சாமஸ்ரீ கௌரவங்களையும் உடையவர். இளைஞர்களுக்கு ஓர் முன்மாதிரி.

இத்தகைய சிறப்புடைய சைவ இளைஞருக்கு, "சைவநெறிப் புரவலர் கலாநிதி மு.கதிர்காமநாதன் விருது" வழங்குவதில் எமது இலங்கை சைவநெறிக் கழகம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

## 3. FEED தொண்டு நிறுவனம் (forum for education and economic development)

கிராம அறநெறிப் பாடசாலை மாணாக்கருக்கு உதவுவதனூடாக, அறநெறிக் கல்வியில் நாட்டத்தை மாணவரிடமும் பெற்றோரிடமும் ஏற்படுத்தல்.

சத்துணவுத் திட்டத்தினூடாக, பொருளாதாரத்தில் நலிந்த மாணவர் உள்ள பிரதேசங்களின் பாடசாலைகளுக்கு சத்துணவு வழங்கல்

தொண்டர் ஆசிரியருக்கு ஊக்கத்தொகை, உதவிகள் வழங்கல்.

மேற்படிப்புகளுக்குத் தெரிவாகி, பண நெருக்கடிகளால் மேற்படிப்புக்களைத் தொடரமுடியாத மாணவர்க்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல்.

பிரத்தியோக மாலைநேர வகுப்புக்களை பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரதேசங்களில் நடத்துதல்.

இத்தகைய பெருமைவாய்ந்த, தமிழுச்சமூகத்தார்பாலும் சைவசமய விழுமியங்களின்பாலும் கரிசனையுடைய தொண்டு நிறுவனத்துக்கு "சைவநெறிப் புரவலர் கலாநிதி மு.கதிர்காமநாதன் விருது" வழங்குவதில் எமது இலங்கை சைவநெறிக் கழகம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

# நன்றியுரை

*"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*

*- திருக்குறள்*

**எ**மது கழகத்துக்கு கௌரவக் காப்பாளாராக விளங்கி,எம் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி, எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற, சைவநெறிக் காவலர்,விடைக்கொடிச் செல்வர் திரு.சின்னத்துரை தனபாலா அவர்கட்கு எமது கழகம் என்றும் நன்றியுடையதாகும்.

புலத்திலும் நாட்டிலும் எமது கழகப் பணிகளுக்கு தமது செல்வத்தை தம்சத்திக்கேற்ப வாரிவழங்கியவாறுள்ள நல்லுள்ளங்கள் பலர். அவர்களுக்கு எமது சமூகத்தின் பிரதிநிதியாக, எமது கழகம் என்றும் நன்றியுடையதாகும்.

இவ்விழாகுறித்த ஆலோசனைகளை நாம் நாடிநின்றபோது, இன் முகத்தோடு வழங்கிய திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சிமையக் கொழும்புக்கிளை இயக்குநர், சைவப்புலவர், சித்தாந்த செம்மணி திரு.செல்லையா நவநீதகுமார் அவர்களுக்கும், ஏனைய சித்தாந்த ஆசிரியருக்கும் எமது நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவ்விழா இனிதே ஒழுங்கமைக்கும்பொருட்டு, முதன்மை அனுசரணையை வழங்கிய திரு.அ.பி.ஜெயராஜா ஐயா (அதிபர் –வெள்ளவத்தை நித்தியகல்யாணி நகைமாளிகை) அவர்கட்கு எமது கழகம் என்றும் நன்றிக்கடனுடையதாகும். ஐயா அவர்கள், சைவ நூல்களில் புலமையுடையவர். புலமையுடையவர்களைப் போற்றுபவர். சைவத்தமிழுலகால் கொண்டாடப்படவேண்டிய அறப்பணியாளர். ஐயா அவர்கள்பாலான எம் நன்றியுடமை சொற்பதம் கடந்த தன்மையுடையது.

துணை அனுசரணையை கனடா நாட்டில் இயங்கும் சைவநெறித் தொண்டர் கழகமும், டென்மார் நாட்டில் இயங்கும் சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவையும் உவந்துளித்தனர். அவர்களின் இச்சைவப்பணி, சைவத்தமிழ் உலகத்தால் பாராட்டுக்குரியதொன்றாகும். சைவநெறித் தொண்டர் கழகத்தின் திரு.நா.அ.கண்ணப்பன் அவர்கள், இலங்கை சைவநெறிக் கழகத்தின் கனடா இணைப்பாளராகத் திகழ்கின்றார். அதுபோல், டென்மார்க் நாட்டில் திருமதி.சயதேவி செல்வராஜன் அவர்கள் எமது கழகத்தின் இணைப்பாளராகத் திகழ்ந்து, சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையை எம்மோடு பந்தம்செய்தார். அவர்களுக்கு எமது கழகம், என்றும் நன்றியுடையதாகும்.

சிறப்பு அனுசரணையை லிட்டில் ஏசியா எம்போரியத்தார் மன மகிழ்வோடு வழங்கினர். அவர்களின் அறப்பணிகளுக்கு சைவத்தமிழுலகு நன்றியு டையதாகும்.

எமது தேவைகளைக் கேட்டறிந்து நிறைவேற்றிடும் இந்து கலாச்சாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்களுக்கு எமது கழகம் என்றும் நன்றியுடையதாகும்.

திருமதி. கிரிஷாந்தி குருசாந் அவர்கள், நேரம்பாராது எம் கழகத்துக்குக்காய் கணினிச் சித்திரத் தொழில்நுட்பத்தில் துறைபோன தம் அனுபவத்தைக்கொண்டு, பல்வேறு பணிகளை ஆற்றித்தந்தார். கழகத்துக்குரிய சின்னம் உருவாகியமை அவர் கைவண்ணத்தினாலாகும்.

கழகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கபூர்வமான கருத்துக்களை காலத்துக்கு காலம் வழங்கி, விழா சிறப்புறப் பணியாற்றிய திரு.விமலநாதன் விமலாதித்தன் அவர்களை எம் கழகத்தின் சொத்தாக எண்ணிப் பெருமைகொள்கிறோம்.

யாழ்ப்பாண இணைப்பாளராக விளங்கும் திரு.ஷ.ஷஜீவன் (தூமி அமைப்பாளர்) அவர்கள் நேரச்சிரமங்கள் பாராது, நல்லை குருமகா சந்நிதானம் அவர்களைத் தேடிச்சென்று கழகப் பணிகளை சிரமேற்கொண்டு செவ்வனே செயற்படுத்தினார். அவர் எம் கழகத்தின் சொத்தென்றால் அது மிகையில்லை.

கனடா திரு.கஜானந், திரு.இராகுலன்,திரு.சரவணன்.நெதர்லாந்து இணைப்பாளர் திரு.கி.பால்ராம் ஆகியோரின் பணிகள் கழகம் சிறப்புறுவதற்கு காரணமாயின. அவர்கள் கழகத்தின் சொத்துக்கள் என்று உரிமைபாராட்டுகின்றோம்.

கழகப்பண்ணைத் தொண்டுநோக்கில் இலவசமாக, இசையுருவாக்கித் தந்த கனடா வீணாலயம் அதிபர் திருமதி.ஜெயந்தி இரட்ணகுமார் வரதராஜா அவர்களுக்கு எமது கழகம் முக்காலமும் நன்றிக்கடனுடையதாகும். அம்மையார் குடும்பத்திற்கு எம்பெருமானின் திருவருட்துணை என்றும் இருப்பதாகுக.

நூல்குறித்த ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி வளப்படுத்திய, திருமதி. செல்வராணி யோகாராஜா அவர்கட்கும், எம்கழகத்தின் சொத்துக்களில் ஒன்றாகத் திகழும் மருத்துவர் செல்வி. திவ்யா யோகராஜா அவர்கட்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

கழகத்தின் இணையத்தளத்தை ஆக்கும் பணியை தொண்டாக மேற்கொண்டுவரும் திரு.பாலச்சந்திரன் சுதர்சன், கழகத்துக்குரிய கணினி

வரைகலைத் தொழில்நுட்பங்களை விருப்போடு ஏற்றுப் பணியாற்றிவரும், திரு.பாலச்சந்திரன் தர்சன் அவர்கட்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகளின் படத்தை வரைந்துதந்த திரு.ஞானகுரு அவர்கட்கு எமது நன்றிகள் என்றும் உண்டாம்.

கொட்டக்கலை தமிழ் மகாவித்தியால அதிபருக்கும், கிழக்கிலங்கைத் திருக்கோவிலைச் சார்ந்த விநாயகபுரம் சிவகாமி முத்தமிழ் அருங்கலை மன்ற இயக்குநருக்கும், பரதநாட்டியக் கலைஞர் செல்வி ஹம்சத்வனி தேவதாஸ் அவர்களுக்கும், ஏனைய கலைஞர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

கழக விழாவுக்குரிய வரவேற்பு அழைப்பிதழைத் துரிதகதியில், சொற்பநிதியில் தொண்டாகத் தயாரித்துத் தந்த, Hookup திரு.கண்ணன் அவர்களுக்கு நன்றிகள் உரித்தாகுக. இரவுபகலாக, எம்மோடு சேர்ந்து நித்திரையையும் உணவையும் விடுத்து "சைவம் போற்றுதும்" நூலுருவாக்கத்தில் ஈடுபட்ட SCS Print அச்சகத்தாருக்கு என்றும் கடமைப்பட்டவராவோம்.

விழா சிறப்புற அனுமதியை வழங்கியதோடு, விடைக்கொடிகளைக் கொண்டு வீதியலங்காரத்தையும் மேற்கொண்ட கொழும்பு மாநகர சபைக்கு எமது நன்றிகள் உரித்தாகுக. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தார் வழங்கிய உதவிகள் காலத்தால் அளப்பரியவை. அவர்களின் இன்முகத்தோடான உதவிகள், கல்லின்மேல் எழுத்துபோல் என்றும் எம்நெஞ்சுள் இருக்கும்.

எமது தவக்குறைவால் எம்நன்றியுரையில் விடுபட்ட பெருந்தகைகளின் பெயர்கள் இருக்குமானால், அப்பெருமக்கள், எம் தவறுகளைப் பொறுத்தருளுமாறு பணிவோடு வேண்டிக்கொள்கிறோம்.

எல்லாம் வல்ல கௌரியம்மை உடனாய திருக்கேதீச்சரத்தான் திருவருள், எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் அனைத்து நல்நெஞ்சங்களோடும் பொலிவுற்று விளங்கப் பணிகின்றோம்.

எல்லாம் திருவருட் சம்மதம்

"எம் கடன் பணிசெய்து கிடப்பதே"

**நூற்குழு**

# Little Asia

## Wellawatte | Pettah

317, 317A, Galle Road, Wellawatta, Colombo 06.
T : +94 11 250 4470, 250 0098
Fax : +94 11 250 8934 | E : info@littleasia.lk

73, 75A, Main Street, Colombo 11
T : +94 11 239 1592, 239 1593
Fax : + 94 11 239 1745 | E: info@littleasia.lk

www.littleasia.lk

40
SINCE 1978

வருடங்கள் நிகரில்லா சேவை



WNJ
SINCE 1978

வெள்ளவத்தை
நித்தியகல்யாணி
ஜுவலரி

541, காலி வீதி, கொழும்பு - 06, வெள்ளவத்தை, இலங்கை.
தொ.பே: +94 11 2 36 33 92 தொ.ந: +94 11 2 50 49 33
inquiry@nithyakalyani.com

www.nithyakalyani.com